Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO hotels
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 03 வெள்ளிக்கிழமை (15.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 138
















# கூட்டமைப்பை பதிவுசெய்ய சம்பந்தன், மாவையே தடை

## ஆனந்தசங்கரி பகிரங்க குற்றச்சாட்டு



(வவுனியா)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவுசெய்வதற்கு, சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவுமே தடையாக உள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைவர் வீ.ஆனந்தசங்கரி குற்றம் சுமத்தியுள்ளார். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. இங்கு சுயநலமும் தங்கள் எதிர்காலம் தொடர்பாகவுமே பிரச்சினை காணப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்கியது நாங்களே. அதற்கு நானே தலைவராகவும் இருந்தேன். பின்னர் கூட்டணி உடைவடைந்ததன் பின்னர் மாவை சேனாதிராஜா தமிழ்ச்செல்வனிடம் சொல்லியே இரண்டாம் தடவையாக தமிழ்த் தேசியக கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அப்போது அன்று முதல் இருந்து மூன்று

19 ஆம் பக்கம் பார்க்க

## மழை பொழியும் சாத்தியம் இன்றும்

(யாழ்ப்பாணம்)

நேற்று இரவு 8.30 மணியுடன் நிறைவடைந்த இருபத்திநான்கு மணித்தியாலங்களில் யாழ் குடாநாட்டில் 56.1 மில்லி மீற்றர் மழை பொழிந்துள்ளது.

அதேவேளை இன்றும் யாழ். குடாநாட்டில் மழை பொழிவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக யாழ். வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று இரவு அறிவித்துள்ளது. அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதி கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் கடும் காற்று வீசக்கூடும் என்றும் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளும்படி வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

## வீதி விபத்தில் வங்கி ஊழியர் பலி

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் வங்கி ஊழியர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். நேற்று மாலை 6.30

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டத்தில் பங்குபற்றாததை அறிவிக்கவில்லை கூட்டமைப்பு

### சாடுகிறார் விநாயகமூர்த்தி எம்.பி.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற யாழ். அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்ட முடிவு தனக்கு உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை எனவும் அதனாலேயே அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார். அத்துடன் யாழ். வைத்தியசாலையின் கட்டடத்திறப்பு விழாவுக்கு தனக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## தொடரும் மழை வெள்ளத்தால் 13 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

வடக்கு, கிழக்கில் பெய்து வருகின்ற கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 13,903 குடும்பங்களைச் சேர்ந்த 63,386 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அடைமழை காரணமாகப் பல குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் மழை வெள்ளம் காரணமாக 986 குடும்பங்களைச் சேர்ந்த 1,719 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வவுனியாவில் கடந்த இரு நாட்களாக தொடர்ந்து மழை பெய்துவருகின்ற நிலையில், வெள்ளம் காரணமாக 943 குடும்பங்களைச் சேர்ந்த 1,561 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க



## இலங்கையின் மனித உரிமை விடயம் திருப்தியடையாத ஆஸி. எதிர்க்கட்சி

இலங்கையின் மனித உரிமை விடயங்களில் முழுமையாக திருப்தியடைய முடியாத போதிலும், இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து அழுத்தங்களுக்கு உட்படுத்துவது முறையல்ல என அவுஸ்ரேலியாவின் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ஜுலி பிஷப், ஏ.பி.சி ஊடகத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இதனைத தெரிவித்துள்ளார். மனித உரிமை



விடயங்கள், மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச்சாட்டுகளுக்கு அச்சமின்றி பதிலளிப்பதற்குத் தயார்

### நவிப்பிள்ளைக்கு அரசு பதிலடி

சுயாதீனமான நாடு என்ற அடிப்படையில் முடிந்தவற்றை நிறைவேற்றி வருவதாகவும் நாட்டிற்கெதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போது அதற்கெதிராக அச்சமின்றி முகங்கொடுக்கத் தயாரென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பாக வெளியிட்ட கருத்துக் குறித்து நேற்று கொழும்பில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா.சபைக்கு மதிப்பு மிகுந்தவற்றை நிறைவேற்றாவிடினும் அரசாங்கத்திற்கு மதிப்பு மிகுந்த அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற கிடைத்த வாய்ப்பை இலங்கை நழுவவிட்டுள்ளதாக நவநீதம்பிள்ளை அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும் சுயாதீன நாடு என்ற அடிப்படையில் முடிந்தவற்றை நிறைவேற்றி வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போது அதற்கு அச்சமின்றி முகங்கொடுக்கத் தயார் எனவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் பிரதம நீதியரசர் பதவி விலகல்

## மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பை இரத்துச்செய்ய உச்ச நீதிமன்றில் மனு

பதவி நீக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான கண்டன பதவிநீக்கத் தீர்மானம் சட்ட விரோதமானது என அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இரத்துச் செய்யக்கோரும் மனு ஒன்றை உச்சநீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

தவிர இந்த மனு தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு உச்சநீதிமன்றம் அறிவித்தல் விடுவித்துள்ளது.

கம்பஹா பிரதேசத்திலுள்ள எச். டபிள்யு. ஹேவகே என்பவரால் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிபதி ஷிராணி திலகவர்த்தன தலைமையில் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு இந்த மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுததுக்கொண்டது. மார்ச் ஐந்தாம் திகதி இந்த மனு விசாரிக்கப்படும் என உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. தனக்கெதிரான கண்டன பதவிநீக்க நடைமுறையை எதிர்த்து ஷிராணி பண்டார நாயக்க செய்திருந்த

19 ஆம் பக்கம் பார்க்க

# பாரிய வர்த்தக மத்திய நிலையம்; கிளிநொச்சியில் புதிய செயற்திட்டம்



(கிளிநொச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டலுக்கு அமைவாக விரைவில் கிளிநொச்சி பாரிய வர்த்தக பொருளாதார அபிவிருத்தி மையமாக மாற்றியமைக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமையப்பெற்றுள்ள பொதுச்சந்தை வளாகத்தில் நேற்றைய தினம் 216 தற்காலிகக் கடைகளைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் இப்பகுதியில் ஒரு பொதுச் சந்தையை நிறுவ வேண்டுமென விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இச்சந்தைக்கட்டடத் தொகுதியில் ஏற்கனவே ஒரு தொகுதி கட்டுமான வேலைகள் நிறைவு பெற்று ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன், மேலும் ஒரு தொகுதி தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டு நேற்றைய தினம் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இதனூடாக இங்குள்ள நுகர்வோர், விவசாயிகள் நன்மையடையும் அதேவேளை, இப்பகுதியின் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு இச்சந்தையை மாகாண சபை நிதியூடாக பாரியளவில் திட்டமிடப்பட்டு இதற்காக 260 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் 57 மில்லியன் ரூபா செலவிலான கட்டுமாணப் பணிகள் நிறைவு பெற்று வர்த்தக நிலையங்கள் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 16 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கடைத் தொகுதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இச்சந்தையின் நிர்மாணப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவில் பங்கெடுத்த நாம் அடிக்கடி பார்வையிட்டு அது தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்தியிருந்தோம் என்பதையும் இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

அந்த வகையில், கிளிநொச்சியை பாரிய வர்த்தக பொருளாதார அபிவிருத்தி மையமாக கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டலில் அடுத்து வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இதனூடாக இப்பகுதி விவசாயிகள், வர்த்தகர்கள், மக்கள் பாரிய நன்மைகளை அடையவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, இவ்வாறு கிடைக்கப் பெறுகின்ற வாய்ப்புக்களை எமது மக்களுக்கு கிடைக்கச் செய்து அதனூடாக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமெனவும் திறந்து வைக்கப்பட்ட தற்காலிக கடைத்தொகுதிகள் நியாயமான முறையிலும், பாரபட்சமற்ற முறையிலும் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதனிடையே கடந்த காலயுத்த பாதிப்புக்களிலிருந்து மக்களை மீட்டு அவர்களை ஒரு இயல்புச் சூழலுக்கு இட்டுச் செல்வதே எமது தலையாய பணி எனவும் சுட்டிக்காட்டினார்.

இதில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் உரையாற்றினார்.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெகூ, கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தெய்வீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வில் இன்று தேவிபாக வதம் என்னும் விடயம் பற்றி அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார்.

## பகவத்கீதை விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணி முதல் 7.30 மணிவரை பகவத்கீதை விளக்கவுரை நடைபெறவுள்ளது.

இலங்கை சின்மயா மிஷனின் யாழ்ப்பாணத்திற்கான வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கி ரத்சைதன்ய சுவாமிகள் இவ் விளக்கவுரையை வழங்கவுள்ளார்.

இவ்விளக்கவுரையில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.(10)

## அறுவடை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளிலும் பெய்துவரும் காலம் பிந்திய மழையின் காரணமாக பெரும்போக நெல் அறுவடை பாதிப்படைந்துள்ளது. இந்நிலை யாழ்பாண மாவட்டத்தில்லுள்ள தீவுப்பகுதிகளிலும் காணப்படுகின்றது. எனினும் கடும் மழையினால் அறுவடை பாதிப்படைந்துள்தோடு பலாபலனைப் பெற முடியாதுள்ளதாகவும் இதனை உரிய அதிகாரிகள் பார்வையிட்டு நிவரண உதவி பெற்றுக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் புங்குடுதீவு பெரும்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே விளையாட்டுக்கழகங்களின் தலைவர் அல்லது செயலாளர் தவறாது கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்குமாறு கரவெட்டி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## ஒத்திவைக்கப்பட்ட விளையாட்டு விழாக்கள்

(அச்சுவேலி)

நேற்றுக்காலை முதல் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் பெய்து வரும் பலத்த மழை காரணமாக கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகள் பலவற்றில் நேற்று நடைபெறவிருந்த வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் கோப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் திட்டமிடப்பட்டு அதற்கான அனைத்து வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்த நிலையில் காலை தொடங்கிய மழை காரணமாக அதனை தொடர முடியாத நிலையில் நிகழ்வுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக குறித்த பாடசாலைகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிகழ்வுகள் குறித்த தினத்தில் நடாத்த முடியாமையையிட்டு மாணவர்கள் மிகவும் கவலையுடன் காணப்பட்டதனையும் அவதானிக்க முடிந்தது. (03)

◈ ◈ ◈ ◈ ◈ ◈

(பருத்தித்துறை)

யாழ்.கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று நடைபெறவிருந்த நிலையில் தற்போது பெய்து வரும் மழையினால் பிற்போடப்பட்டுள்ளது.

திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (109)

## யாழில் 72 இந்துக்கோயில்கள் விரைவில் புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் இந்து கலாசார புத்தசாசனம் மற்றும் மத விவகார அமைச்சு வழங்கும் நிதியுதவியுடன் இவ்வாண்டில் 72 இந்துக்கோயில்கள் புனரமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கமைய 2 ஆயிரம் இந்துக் கோயில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்புக்கு அமைய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் 1382 இந்துக்கோயில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்யப்படாத 72 கோயில்களே தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகத்தின் இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தெரிவித்துள்ளார். (10)

## உளவள ஆலோசனை வழங்க தொண்டர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தற்கொலைகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுமித்ரயோவின் யாழ்ப்பாணக் கிளையான "கை கொடுக்கும் நண்பர்களின் சேவை" பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறது.

ஆரம்பித்து இரு வாரங்களுக்குள் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இப்பணிமனையுடன் தொடர்பு கொண்டுள்ளதுடன், மனக்கவலை, தளர்ச்சி, மன உளைச்சல் விரக்தி போன்ற பாதிப்புக்களுக்கு உள்ளாவோருக்கு இப்பணிமனையில் சேவையாற்ற தன்னார்வத் தொண்டர்கள் உணர்வு ரீதியான ஆதரவை வழங்கிவருகின்றனர்.

தினசரி பிற்பகல் 12.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றுவரும் சேவையை மேலும் விரிவுபடுத்துவதற்கு மேலதிகத் தொண்டர்கள் அவசரமாகத் தேவைப்படுவதாக கைகொடுக்கும் நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

வாரத்தில் ஒரு நாள், நான்கு மணி நேரம் சம்பளம் எதுவுமின்றிப் பணியாற்ற முன்வரும் தன்னார்வத் தொண்டர்கள் 0212228117 அல்லது 0778923480 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும், இவ்வாறு சேர்வோருக்கு குறிப்பிட்ட எந்தக் கல்வித் தகைமையோ, தொழில் ரீதியான தகைமையோ அவசியமில்லை எனவும், ஓய்வு பெற்றோரும் இணைந்து தொண்டாற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணி தொடங்க முன் உரிய பயிற்சி வழங்கப்படும். தேர்வுக்கான நேர்முகம், வார இறுதியில் நடைபெறவுள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## வேப்பமரத்தில் தொங்கியது வயோதிபரின் சடலம்

### கைதடி முதியோர் இல்லத்தில் விபரீதம்

(கைதடி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கி வாழ்ந்து வந்த முதியவரான கந்தையா திருநாவுக்கரசு (வயது-85) நேற்று மதியம் இல்ல வளாகத்தில் உள்ள சிறிய வேப்பம் மரத்தில் நைலோன் கயிற்றில் தூங்கிய நிலையில் இறந்து காணப்பட்டார். இவரது சடலத்தை மாலை 5.30 மணியளவில் சாவகச்சேரி பொலிஸாரும் திடீர் மரண விசாரணை அதிகாரியும் விசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி கூறியதற்கு அமைவாக சடலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் முதியவர் 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இவ் இல்லத்திலேயே வசித்து வந்ததுடன், இவர் கோயில் தொண்டு வேலைகளும், பூ மரங்கள் பராமரிப்பதிலும் ஈடுபட்டு வந்ததுடன், இவரின் பிறப்பிடம் காரைநகர் என்றும், பின்னர் வீரபத்திரர் தெரு, கல்வியங் காட்டில் வசித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (80,43,137)

# மக்களுக்கு சிறந்த சேவையை லயன்ஸ் கழகங்கள் வழங்கவேண்டும்

## - சர்வதேச லயன்ஸ் மாவட்ட ஆளுநர்

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேச மக்களுக்கு ஒரு லயன்ஸ் கழகத்தால் மட்டும் சேவைகளை வழங்க முடியாமலிருப்பதனாலேயே நெல்லியடியிலும் லயனஸ் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மேலும் வல்வெட்டித்துறையிலும் லயன்ஸ் கழகமொன்று அங்குராப்பணம் செய்யப்படவுள்ளது.

இந்த லயன்ஸ் கழகங்கள் வடமராட்சிப் பிரதேச மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் என சர்வதேச லயன்ஸ் கழக 306 பி I மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராசா தெரிவித்தார்.

நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்தபோது இடம்பெற்றிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

நெல்லியடி மாவட்ட லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திலேயே மக்களுக்காக சிறப்பாக சேவைகளை வழங்கிவருவது பாராட்டுக்குரியதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

சர்வதேசமெங்கும் லயனஸ் கழகங்கள் இயங்கி வருகின்றன. லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மக்கள் சேவைகளை இலட்சியமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.

லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றவர்களுக்கு சேவை வழங்க வேண்டும் என்ற நோக்கோடு உன்னத சேவைகளை வழங்குகின்றனர்.

நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் பெருமுயற்சியினாலேயே அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மக்களுக்குச் சேவையாற்ற எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

மக்கள் மத்தியிலே புரிந்துணர்வை ஏற்படுத்துவது லயன்ஸ் கழகத்தின் முக்கியமான நோக்கமாக இருப்பதோடு, ஆதரவற்றோருக்கு உதவி வழங்குவதும், நொந்த மனத்தவர்களை மகிழ்விப்பதற்குமான சேவைகளை வழங்குவதும் அதன் ஏனைய நோக்கங்களாகும் எனத்தெரிவித்தார். (01)

# உதவிப்பொருட்கள் வழங்கி வைப்பு

(வவுனியா)

வவுனியா - கொக்கச்சான்குளம் (தற்போது போகஸ்வெவ என அழைக்கப்படுவது) கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட 300 சிங்கள குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கொக்கச்சான்குளத்தில் இடம்பெற்றது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம் மக்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உலருணவுகளுடன் பயன்தரு மரங்களும் வழங்கி வைக்கப்பட்டது. இதேவேளை இக்கிராமத்தில் பாடசாலை கட்டடத்திற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

இந் நிகழ்வில் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வன்னி கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பொலிபஸ் பெரேரா, கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜெயரட்ன உட்பட பலரும் கலந்து கொண்டனர். (160)

# மூத்தோர் அவையின் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வட மேற்கு ஆனைக்கோட்டை ஜே.99 கிராம அலுவலர் பிரிவு மூத்தோர் அவையின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்.ஸ்ரீ வைத்தியலிங்கம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

லயன் ஏ.வரதராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், கௌரவ விருந்தினர்களாக அண்ணா கோப்பி உரிமையார் லயன் பி.நடராஜா, ரி.விக்ரமதீசன் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தம்பியப்பா கனகராசா ஜே.99 கிராம உத்தியோகத்தர் திருமதி பி.காண்டீபன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.விமல்ராஜ், லயன் டாக்டர் எம்.பஞ்சலிங்கம், அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா, யாழ். மாவட்ட முதியோர் பேரவை தலைவர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை மூத்தோர் அவையின் பொருளாளரர் வா.ஜெயரட்ணம், மூத்தோர் அவை உறுப்பினர்களான திருமதி பி.சுப்பிரமணியம், கே.நவரட்ணராஜா ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

## க.பொ.த.உயர்தர பெறுபேறுகள்

யாழ். புற்றளை மகா வித்தியாலயம்

கலைப்பிரிவு

ச.சஜித்தன் 2பிசி, ச.நிரோசன் 3சி, ச.ஜனனி பிசிஎஸ், நா.சுஜீவன் 3சி, அம்பிகா பிசிஎஸ். (01)

# நூல் வெளியீடு

(சாவகச்சேரி)

திருமதி தே.பஞ்சாட்சரம் ஆசிரியையால் எழுதப்பட்ட க.பொ.த. (உயர்தர்) புவியியல் பாட வழிகாட்டல் நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கச்சாய் - கொடிகாமம், புனித ராயப்பர் தேவாலய அன்னை திரேசா முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக, விஞ்ஞான முதன்மை ஆசிரியர் சி.நாகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவானந்தம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் த.கந்தையா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் மதிப்பீட்டுரையை ஓய்வு நிலை முதன்மை ஆசிரியர் இ.சர்வேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். (11)




கல்வி அமைச்சுடன் இணைந்து ஜனாதிபதி செயலகத்தின் 'மதர் ஸ்ரீலங்கா' நம்பிக்கை பொறுப்பினால் அமுல்படுத்தப்படும் கருத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு நடைபெற்று வருகிறது.


நேற்று இச்செயலமர்வு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இத்திட்டத்தின் தலைவர் திருமதி ஜானகி குறுப்பு (தேயிலை அபிவிருத்தி சபைத் தலைவர்) அதன் அலுவலர்கள், விஜயதுங்க, கனாநாயக்க மற்றும் வடமாகாண கல்விப்பணிப்பாளர் செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டதன் பின், தலைவர் உரையாற்றுவதையும், 'விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவிகளில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள் ஆர்.ராஜகுமார்)

# மாநாடு

(வடமராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி I இன் வருடாந்த மாநாடு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறுமென சர்வதேச லயன்ஸ் கழக 306 பி I மாவட்ட ஆளுநர் எஸ்.எஸ்.தங்கராசா தெரிவித்துள்ளார். (01)

# சாதனை மாணவர்களின் அனுபவப் பகிர்வு




## சிறிஸ்கந்தன் கோகுலன்

யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி
வர்த்தகப்பிரிவு
வர்த்தகம் A
கணக்கியல் A
பொருளியல் A
மாவட்டநிலை - 64

எனது இப்பெறுபேற்றுக்கு காரணமாக இருந்த பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் எனது கல்விச் செயற்பாட்டிற்கு உதவி புரிந்த அண்ணா, தனரூபனுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வீழ்வது வெட்கமல்ல வீழ்ந்து கிடப்பதே வெட்கம். மனதில் நம்பிக்கையுடன் திடமாக முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். சிறுவயதிலிருந்தே எனது இலட்சியம் ஒரு வங்கியாளனாக வரவேண்டும் என்பதே.

## செல்வராசா சுதன்



யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி
வர்த்தகப்பிரிவு
வர்த்தகம் A
கணக்கியல் A
பொருளியல் B
மாவட்டநிலை - 49

இப்பெறுபேற்றை பெற உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் எனது குடும்பத்தினருக்கும் எனது சகல நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு தலைசிறந்த கணக்காளராக வருவதே எனது இலட்சியமாகும். அதிகமாக பரீட்சைகளை எதிர் கொள்வதே எந்த ஒரு மாணவனுக்கும் வெற்றியைத் தரும்.

## செ.மயூரன்



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
கணிதப்பிரிவு
இரசாயனவியல் A
கணிதவியல் A
பௌதிகவியல் B
மாவட்டநிலை - 58

எனது இப்பெறுபேற்றுக்கு காரணமாக இருந்த பெற்றோர்கள், சகோதரார், உறவினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் சக நண்பர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

கற்பிக்கப்படும் விடயங்களை விடாமுயற்சியுடன் அன்றாடம் கற்று தெளிவதன் மூலமும், கடின பயிற்சியின் மூலமும் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெறமுடியும். எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வந்து நாட்டிற்கு சேவை செய்யவேண்டும் என்பதே எனது குறிக்கோளாகும்.

நேர்காணல்: கே.கே.விசிந்தன்

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கொடுமையான உலகிலிருந்து தப்பிக்க...

நேற்றைய தினம் காதலர் தினக் கொண்டாட்டங்களைக் கேட்கவும் வாசிக்கவும் நேர்ந்தது. மற்றெல்லா உணர்ச்சிகளை விடவும் உணர்ச்சிபூர்வமான கொண்டாட்டம் இதில் மிகையாக இருப்பது யோசிக்க வைக்கிறது. காதல் நாயைக் கூட எதுகை மோனையுடன் குரைக்கச் செய்துவிடுகிறது என்று ஒரு ஆங்கிலப் பழமொழி கூறுகிறது.

கவிதை எழுதத் தொடங்குகிறவர்கள் எல்லோருமே காதலில்தான் ஆரம்பிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. நேற்றுக் கேட்க நேர்ந்த கவிதைகள் எனப்படுவனவற்றின் எண்ணிக்கையைப் பார்த்த போது அப்படித்தான் தோன்றுகிறது. காதல் மனிதனை இவ்வளவு அல்லாட வைப்பதற்கு அவனது மனம் தான் காரணம் என்றால், மனித இனம் காலாகாலமாக கேட்டும் அறிந்தும் வந்த விஷயங்களால் உருவானதுதான் இந்தக் காதல் உணர்வாக இருக்க வேண்டும்.

காதல் என்பது கற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தன்மைதான். காதலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கா விட்டால் யாரும் காதல் வயப்பட்டிருக்க மாட்டார்கள் என்கிறார் ரோச்பௌகால்ட் என்பவர். அதாவது இலக்கியங்கள் மற்றும் புனைவுகளால் அது தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மாறாக, காதல் நமது உடலிலிருந்து தோற்றம் பெறுகிறது என்றால், அதாவது ஓமோன்கள் மற்றும் உடலின் சுரப்புகளால் அந்த உணர்ச்சி தூண்டப்படுகிறது என்றால் அது காமத்தின் ஒரு வடிவமாக இருக்க வேண்டும். காதல் பற்றி ஈ.வெ.ரா. பெரியார் சொல்லியிருப்பதும் நம் கவனத்திற்குரியது. 1931 ஆம் ஆண்டு 'குடியரசு' இதழில் அவர் எழுதியது இது:

"காதலுக்கு ஏதேதோ கற்பனைகளை கற்பித்து ஆண் பெண்களுக்குள் புகுத்தி விட்டதால் ஆண் பெண்களும் தாங்கள் உண்மையான காதலர்கள் என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி, எப்படிக் குழந்தைகள் தூங்குவது போல வேஷம் போட்டு கண்களை மூடிக்கொண்டிருந்தால் பெரியவர்கள் குழந்தைகளின் தூக்கத்தைப் பரிசோதிப்பதற்காக "தூங்கினால் கால் ஆடுமே" என்று சொன்னால் அந்தக் குழந்தை தன்னைத் தூங்குவதாக நினைக்கவேண்டுமென்று கருதி காலைச் சிறிது ஆட்டுமோ அதுபோலும், எப்படி பெண்கள் இப்படி இப்படி இருப்பதுதான் கற்பு என்றால் பெண்கள் அதுபோலெல்லாம் நடப்பது போல் நடப்பதாய் காட்டித் தங்களைக் கற்புள்ளவர்கள் என்று காட்டிக் கொள்ளுகின்றார்களோ அதுபோலும் உண்மையான காதல்களானால் இப்படி இருப்பார்களே என்று சொல்லிவிட்டால் அல்லது அதற்கு இலக்கணம் கற்பித்து விட்டால் அதுபோலவே நடந்து காதலர்கள் என்பவர்களும் தங்கள் காதலைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். இதற்காகவே அவர்கள் இல்லாத வேஷத்தையெல்லாம் போடுகிறார்கள். அதை விவரிப்பது என்றால் மிகவும் பெருகிவிடும்.

ஆகவே ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை. அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அஃறிணைப் பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவது போல் தானே ஒழிய வேறில்லை.

ஆனால் அன்பும், ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்குமேயொழிய மனதிற்குத் திருப்தியும், இன்பமும் இல்லாமல் அன்பும், ஆசையும், நட்பும் இருப்பதாய் காட்டுவதற்காக அல்ல."

காதலர் தினக் கொண்டாட்டங்கள் வேறு வேறு வர்த்தக நோக்கங்களுக்காக பெருப்பிக்கப்பட்டிருந்தாலும், மனிதனின் சந்தோஷத்திற்காக இருக்கும் காதலை கொண்டாடுவதில் தப்பில்லை. காதல், இந்தக் கொடுமையான உலகிலிருந்து நம்மைத் தனிப்படுத்தி நமக்குப் பாதுகாப்பு அளிப்பதாக உணரப்படுவதால், அது கொண்டாடப்படுகிறது என்கிறார் டயன் அக்கர்மென். அது சரிதான்! - ஆசிரியர்

# பிரதேசசபை தொழிநுட்ப அதிகாரி இலஞ்சம்பெற்ற குற்றத்தில் கைது

தனமல்வில பிரதேசசபையின் தொழிநுட்ப அதிகாரி ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். 25,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றபோது அவர் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் சீனி நிறுவன நிர்வாகியால் நிறைவேற்றப்பட்ட பாலம் ஒன்றைப் பற்றி ஆய்வு அறிக்கை சமர்பிக்கவென தொழிநுட்ப அதிகாரி இலஞ்சம் பெற்றுள்ளார்.

பாலம் கட்டப்படும்போது பிரதேச சபையால் அறவிடப்படும் பிணைப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள குறித்த தொழிநுட்ப ஆய்வு அறிக்கை அவசியம் என்ற நிலையில் அறிக்கையை பெற்றுக்கொடுக்க தொழிநுட்ப அதிகாரி இலஞ்சம் கோரியுள்ளார்.

பிரதேச சபை வளாகத்தில் வைத்து குறித்த இலஞ்சத்தை பெற்றுக்கொண்ட வேளை, தொழிநுட்ப அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புத்திணைகளம் தெரிவித்துள்ளது.

# பாப்பரசர் தெரிவு தொடர்பாக பிரசாரங்கள் செய்வது தவறு

புனித பாப்பரசர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அது தொடர்பில் பிரசாரங்களை செய்வது முறையில்லை என்று, கொழும்பு கத்தோலிக்க பேராயர் சங்கம் தெரிவித்துள்ளது. அதன் ஊடக பேச்சாளர் அருட்தந்தை ஜோசப் ஆண்டகை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் - பாப்பரசர் பெனடிக்ட் தமது பதவி விலகலை அறிவித்ததன் பின்னர், அந்த பதவிக்கு கர்தினால் மெல்கம் ரஞ்சித்தின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகின.

எனினும் இது தொடர்பில் முன்கூட்டியே கூற முடியாது என்றும், இந்த பதவிக்கு யாரும் விண்ணப்பிப்பதில்லை என்றும், இந்த பதவிக்கானவரை வத்திக்கான கத்தோலிக்க சபையினாலேயே தெரிவு செய்யப்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேரர் கொலை விவகாரம் தொடர்பாக சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

மொரட்டுவ - ஏகொடஉயன சுனந்தோபனந்தாராம விகாராதிபதி மெட்டிகஹதென்ன விமலவன்ச தேரர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய ஒன்பது சந்தேகநபர்கள் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதில் நால்வர் நீதிமன்றால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன்படி மொரட்டுவ பிரதி மேயர் உள்ளிட்ட அனைத்து சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு மொரட்டுவ நீதவான் மற்றும் மாவட்ட நீதிபதி பூர்னிமா பரணகம உத்தரவிட்டார்.

தேரரின் மரண விசாரணையுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் இம்மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றில் சமர்பிக்குமாறு பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

பெப்ரவரி 3 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் ஏகொடஉயன சுனந்தோபனந்தாராம விகாராதிபதி மெட்டிகஹதென்ன விமலவன்ச தேரர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார். காணிப் பிரச்சினை காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

# புதிய நிக்காயா ஒன்றை உருவாக்க அரசு முயற்சி

(கொழும்பு)

அரசாங்கம் சிங்கள அடிப்படைவாதம் மிக்க புதிய நிக்காயா ஒன்றை உருவாக்க முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முஸ்லிம் மற்றும் சிங்கள பௌத்தர்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறது. சிங்கள பௌத்த அடிப்படை வாதத்தை உருவாக்கி, அதன்மூலம் அரசாங்கம் இலாபம் தேடும் வகையில் செயற்படுகிறது.

இதனால் தற்போது சரிந்து கொண்டு செல்கின்ற தமது வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ள முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது. இதன் மூலம் மீண்டும் இலங்கையில் இனப்பிரச்சினை ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயத்தை பொறுத்தவரையில் முஸ்லிம் மக்கள் பொறுமையாக இருப்பதாகவும், அதற்காக ஐக்கிய தேசிய கட்சி அவர்களுக்கு நன்றி தெரிவத்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரயிலுடன் கார் மோதி விபத்து

(கொழும்பு)

காலி துறைமுக பொலிஸ் பிரிவில் கங்காராம வீதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பயணித்த கார் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் காரில் பயணித்த இருவர் படுகாயமடைந்து காலி கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மக்குலுவெலயில் இருந்து காலி நோக்கி பயணித்த கார் கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் 37 வயதுடைய பெண்ணும், 27 வயதுடைய ஆணும் காயமடைந்துள்ளனர்.

# "மதர் ஸ்ரீலங்கா" அறிமுக நிகழ்வு

(வவுனியா)

மாணவர்களின் ஆற்றலுக்கு புத்துயிர் அளித்து நிலையான சமூகத்தை கட்டி எழுப்ப நட்புறவு மனப்பான்மை நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்காக கல்வி அமைச்சுடன் இணைந்து ஜனாதிபதி செயலகத்தின் 'மதர் ஸ்ரீலங்கா' நம்பிக்கைப் பொறுப்பினால் அமுல்படுத்தப்படும் ஒரு கருத்திட்ட அறிமுக நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் செயற்றிட்டத்தின் தலைவர் திருமதி ஜானகி குறுப்பு தலைமையில் இடம் பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் வவுனியா கல்விப் பணிப்பாளர் என பலரும் கலந்துகொள்ளவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ)

# பட்டதாரிகள் இணைப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா குறிப்பிட்டுள்ளார். இதன்படி மலையக பட்டதாரிகள் குறித்த வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடல்வாழ் உயிரினங்களைப் பற்றிய ஒரு ஆவணப்படம், பேராழிகள் - Oceans என ஆங்கிலத் தலைப்பு. ஜாக்குவெ பெர்ரின் (Jacques Perrin) என்னும் பிரெஞ்ச் நடிகர்-இயக்குநரால் இயக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. உலகம் முழுக்க ஐம்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் மொத்தம் நான்கு வருடங்கள் படம்பிடிக்கப்பட்டது. ஜாக்குவெ பெர்ரின், சின்னஞ்சிறு பூச்சிகளின் உலகில் நடக்கும் தொடர்புகொள்ளல் முறைகளை நுணுக்கமாக ஆராயும் 'Microcosmos' மற்றும் பறவைகளின் நெடும் பிரயாணத்தை விளக்கும் 'Winged Migration' என்னும் புகழ் பெற்ற ஆவணப்படங்களையும் இயக்கியவர்.



பிரகாஷ் சங்கரன்

பூமிப்பந்தில் நிலத்தின் அளவை விட மூன்று பங்கு அதிகமான பரப்பைக் கொண்ட கடலில்,

# வாழ்வெனும் வரம்

நிலத்தை விட மூன்று மடங்கு அதிகம் அற்புதங்களும் இருக்கத்தான் செய்யும். பூமியின் உயிரினங்களில் மிகப்பெரியது முதல் மிகச் சிறியது வரை அங்கு உயிர் வாழ்கின்றன. நமது கற்பனைக்கே எட்டாத ஆயிரமாயிரம் விநோத வடிவங்களில் உயிரினங்கள்.

ஒன்றரை மணிநேரப் படத்தில் காட்டப்படும் பல்வேறு வகையான உயிரினங்களின் வாழ்க்கையில் வெறும் இரண்டு நிமிடங்கள் மட்டுமே வரும் ஒரு உயிரினத்தின் கதை, படைப்பின் விநோதங்களுக்கப்பால் இயற்கையின் புதிரான கணக்கு வழக்குகளையும் - ஒட்டுமொத்தமாக மனித வாழ்க்கையையும் நின்று யோசிக்க வைத்தது. கடல் - எப்படியானாலும் நம்முடைய ஆதி வீடல்லவா?

தென்அமெரிக்க கடற்கரையில் நல்ல வெளிச்சமும் வெப்பமும் உள்ள ஒரு பகல் பொழுது. கடல் அலையின் ஆர்ப்பரிப்பைத் தவிர அந்த வெளியை நிரப்பிய ஒருவித மௌனம் மட்டும். திடீரென்று வெண்மையான கடற்கரை மணல் ஆங்காங்கே அசைந்து மொட்டுவிடுவது போல சிறிய குமிழாக வளர்ந்து விரிசல் விடுகிறது. உள்ளிருந்து கரிய ஆமைக்குஞ்சுகள் முட்டையை உடைத்துக்கொண்டு தலைநீட்டுகிறது. தலையை இருபுறமும் அசைத்து, பிஞ்சு துடுப்பை விரித்து முட்டையில் ஓட்டைக் கிழித்துக் கொண்டு மிகுந்த சிரமப்பட்டு முழுமையாக விடுபடுகின்றன. அந்த நொடியிலேயே கடலை நோக்கி சின்னஞ்சிறிய கால்களையும், துடுப்புகளையும் வீசியபடி, முதுகில் ஓட்டைச் சுமந்துகொண்டு அடித்துப் புரண்டு கொண்டு ஓடுகின்றன. கடல் அலைக்கரங்களை வீசி ஓலமிட்டு அழைக்கிறது. இப்பொழுது கமரா வானத்தைக் காண்பிக்கிறது. இந்த ஆமைக் குஞ்சுகளுக்காகவே நீண்ட தூரம் பறந்து வந்து களைத்து வானத்திலேயே பசியுடன் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது ஒரு கடற்பறவை இனம். வானை நிறைத்து நுற்றுக்கணக்கான பறவைகள் இருக்கின்றன. பூமியை நோக்கி எய்யப்பட்ட அம்பு போல சர் சர்ரென்று வேகமாகப் பறந்து வந்து ஆமைக் குஞ்சுகளைக் கவ்விச்செல்கின்றன பறவைகள்.

பிறந்த நொடிமுதல் வாழ்க்கைப் பந்தயம் ஆரம்பிக்கின்றது. பந்தயத்தின் முடிவு வாழ்வு அல்லது சாவு - இரண்டில் ஒன்று தான். இரண்டு உயிரினங்களின் உயிர்வாழ்வதற்கான போராட்டம். ஆமைக் குஞ்சுகள் முட்டையை விட்டு வெளியேறிய கணமே ஓட ஆரம்பிக்கின்றன. நீரின் ஆழத்திற்கு சென்று சேர்வதற்குள் மிகப்பெரும்பாலானவை

> **மேலே பசியுடன் பறந்தலைந்து கொண்டிருக்கும் கடற்பறவைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக எண்ணிக்கையில் ஆமைக்குஞ்சுகள் வெளிவந்தால் தான், ஒவ்வொரு பறவையும் ஒன்றிரண்டாகத் தங்களுக்கு எனக் கவ்விக் கொண்டது போக சில ஆயிரம் ஆமைகள் உயிர் பிழைத்து கடலைச் சென்றடைய முடியும். பிறக்க வேண்டிய ஆமைக்குஞ்சுகளின் எண்ணிக்கை, வெளிவர வேண்டிய நேரம், எதிரிகளின் எண்ணிக்கை என யாவும் இயற்கையின் மாறாத விதிகளில் மிகக்கச்சிதமாக முன்வகுக்கப்பட்ட உயிர்ப் போராட்டம் இது.**

மரணம் அடைகின்றன. பிறந்த அடுத்த நொடியில் மரணம். என்ன வாழ்க்கை இது? இந்தப் பிறப்பிற்கு என்ன அர்த்தம்? எதற்காகப் பிறக்க வேண்டும்? பறவை இனம் உயிர்பிழைக்கவா? அதற்காக ஆமையாய்ப் பிறந்து அக்கணமே மடிய வேண்டுமா? இதுபாரபட்சம் இல்லையா? என்ன இயற்கை இது?

கொஞ்சம் நிதானமாக யோசித்தால், ஒவ்வொரு சம்பவமும் அதன் முன் பின் நிகழும் சம்பவங்களுடன் கொள்ளும் தொடர்பை கவனிக்க முடிகிறது. பிரபஞ்ச விதியின் திரைகள்ஒவ்வொன்றாக மெல்ல் விலக்கப்பட, காட்சி இப்போது தெளிவாகிறது. இந்தத் தரிசனம் வாழ்வு குறித்த பல சிந்தனைகளை ஒன்றன் பின் ஒன்றாக எழுப்புகிறது.

மற்றெல்லா உயிரினத்திலும் குட்டிகள் பிறந்தது முதல் சுயமாக வாழும் தகுதி பெறும்வரை தாயால் உணவு ஊட்டப்பட்டு, உயிர் பாதுகாக்கப்பட்டு மிகக்கவனமாக பேணி வளர்க்கப்படுகின்றன. ஆனால் கடல் ஆமைகள் கரையில் வந்து முட்டை இட்டுவிட்டு உடனேயே கடலுக்குச் சென்று விடுகின்றன. குஞ்சுகள் பிறக்கும் போதே தன்னந்தனியாக, காத்துக்கொண்டிருக்கும் மரணத்தின் கரிய நிழலை எதிர்கொண்டபடி பிறக்க வேண்டிய சவாலை இயற்கை விதித்திருக்கிறது.

ஒவ்வொரு ஆமையும் 'ஆயிரத்தில் ஒருவன்' தான். ஆம், கரையில் பிறந்த இடத்திலிருந்து கடலுக்குள் சென்று சேரும் அந்த இருபதடி தூர உயிருக்கான ஓட்டத்தில் ஆயிரத்தில் ஒரு ஆமை மட்டுமே கடற்பறவைகளின் பசித்த வாயில் இருந்து தப்பிக்கிறது. கடலுக்குள் சென்று சேர்ந்தாலும் கூட்டமாக இடப்பட்ட பல்லாயிரம் முட்டைகளில் எந்த ஆமைக்குஞ்சின் தாய் எந்த பெரிய ஆமை என்று எப்படி தெரியும்? எனவே தானாகவே தன்னை வளர்த்துக் கொள்ளவேண்டியது தான். அப்படி கரையில் உயிர் பிழைத்த ஆமைக் குஞ்சுகளுக்கு அடுத்த எதிரி கடலில் இருக்கும் பெரிய மீன்கள். அவற்றிலிருந்தும் எவை தப்புகின்றனவோ அவையே கடல் ஆமை இனத்தின் எதிர் காலத்தை நிர்ணயிக்கின்றன. அதுவும் அவ்வளவு எளிதானது அல்ல. ஒரு கடல் ஆமை முழு பாலின வளர்ச்சி அடைவதற்கு (இனத்தைப் பொறுத்து) குறைந்தது இருபத்தி ஐந்து முதல் அதிகபட்சம் ஐம்பது ஆண்டுகள் ஆகும். எதிரிகளிடமிருந்து தப்பி உயிர் பிழைத்து வெறும் ஒரு சதவிகிதம் மட்டுமே பாலின முதிர்ச்சி அடைந்து தங்கள் இனத்தின் உயிர்ச் சங்கிலி அறுபடாமல் காக்கின்றன.

உயிர்வாழும் கடல் ஆமைகளை வெற்றியாளர்களின் சமூகம் என்று சொல்லலாம், அல்லது இனத்தின் தொடர்ச்சிக்கு வேண்டி உயிரிழந்த சகோதரர்களின் உயிர்த் தியாகத்தால் பிழைத்து வாழும் சமூகம் என்றும் சொல்லலாம். சுமார் 10.1 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மூதாதையர் ஆமை இனத்தில் இருந்து பிரிந்தவை கடல் ஆமைகள். இந்தக் கிரகத்தின் உயிரினங்களில் மூத்தகுடிகளுள்ஒன்று. இத்தனை இன்னல்களுக்குப் பிறகும் கோடிக்கணக்கான ஆண்டுகள் உயிர் பிழைத்து வந்தவை, 'நேற்றுப் பிறந்த' மனிதனால் எந்த மதிப்பும், இரக்கமும் இல்லாமல் வேட்டையாடப்படுகின்றன.

கடல் ஆமைக் குஞ்சுகள் கரையில் முட்டை ஓட்டைப் பிளந்து கொண்டு வெளிவரும் சமயத்தில் இருந்து பல்வேறு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று கூட பின்னோக்கியோ பக்கவாட்டிலோ ஓடுவதில்லை. அப்படி ஓடினால் ஆயிரத்தில் ஒன்று கூட உயிர்பிழைக்க வாய்ப்பில்லை. மிகச்சரியாக எல்லாமே கடலை நோக்கியே ஓடுகின்றன. அவை எப்படி கடலின் திசையை அறியும்? அப்போது தான் இன்னொன்று தெரிகின்றது, தாய் ஆமைகள் எல்லா முட்டைகளையும் தலை கடல் நோக்கி இருக்குமாறு இட்டிருக்கின்றன. அவற்றின் எதிர் காலத்தின் திசை கருவிலேயே விதிக்கப்பட்டிருக்கிறது.வெளியேறியவுடன் அந்தத் திசை நோக்கி ஓட வேண்டியது தான்.



முன்னரே நேரம் குறித்து வைத்தது போல ஒரே கால அளவைக்குள் படைபடையாக ஆமைக் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவருகின்றன. அப்படி இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு நாளின் வெவ்வேறு பொழுதுகளில் அல்லது வெவ்வேறு நாட்களில் முட்டைகளைக் கீறி வெளிவருமானால்? அப்பொழுதும் ஒன்று கூட உயிர் பிழைக்க முடியாது. மேலே பசியுடன் பறந்தலைந்து கொண்டிருக்கும் கடற்பறவைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக எண்ணிக்கையில் .ஆமைக் குஞ்சுகள் வெளிவந்தால்தான், ஒவ்வொரு பறவையும் ஒன்றிரண்டாகத் தங்களுக்கு எனக் கவ்விக் கொண்டது போக சில ஆயிரம் ஆமைகள் உயிர் பிழைத்து கடலைச் சென்றடைய முடியும். அத்தனையும் சரியாக நடந்தால் ஒரு ஆமைக் குஞ்சு வாழ்வெனும் வரத்துடன் ஆழியை அடையும்.

ஒருவேளை கொன்று தின்பதற்காகக் காத்திருக்கும் எதிரிகளே இல்லாமல் இருந்திருந்தால்? இனப்பெருக்க காலத்தில் ஆயிரக்கணக்கான பெண் ஆமைகள் கரைக்கு வந்துகடற்கரை மணலை அகழ்ந்து முட்டையிடுகின்றன. ஒவ்வொன்றும் சராசரியாக இருநூறு முட்டைகள் வரை இடும். அவ்வளவும் பொரிந்து குஞ்சுகள் கடல் சேர்ந்தால் கடலே ஆமைகளின் ஏகாதிபத்தியமாகி விடும். பிறக்க வேண்டிய ஆமைக்குஞ்சுகளின் எண்ணிக்கை, வெளிவர வேண்டிய நேரம், எதிரிகளின் எண்ணிக்கை என யாவும் இயற்கையின் மாறாத விதிகளில் மிகக்கச்சிதமாக முன்வகுக்கப்பட்ட உயிர்ப் போராட்டம் இது. ஒன்று பிறழ்ந்தாலும் ஏதாவது ஒரு இனம் கொஞ்சம்கொஞ்சமாக அழிந்துபட்டுப் போகும்.

சிந்திக்கையில் ஒவ்வொரு மனிதருமே வெற்றிகரமாக உயிர் பிழைத்த ஒரு கடல் ஆமை போல தான். ஆயிரத்தில் ஒன்றாகக் கடல் சேர்ந்த ஆமைக்குஞ்சு போல, பல்லாயிரத்தில் அண்டம் சேர்ந்த ஒரு உயிர் அணு தான் மனிதன். ஓடு உறுதியாகி வளர்ந்து விட்டால் ஒவ்வொரு ஆமையும் (இனத்தைப் பொறுத்து) சராசரியாக நாலரை அடி நீளமும், 250 கிலோ எடையுமாக, எண்பது ஆண்டுகள் உயிர் வாழும். பிறந்த நொடியில் ஓடிய ஓட்டத்திற்கும், காட்டிய வேகத்திற்கும் முற்றிலும் எதிர்மாறாக, காலத்தின் வேகத்தைக் கொஞ்சம் கூட சட்டை செய்யாமல் மிக நிதானமாக, மிதக்கும் குன்றுகள் போல வாழ்கின்றன. வரமாகக் கிடைத்த வாழ்வை நிறைவாக வாழ்ந்து மடிகின்றன. ஆமைக்குஞ்சுகளுக்கு மட்டுமல்ல மனிதனுக்கும் இந்த வாழ்க்கை பெரும் வரம்தான். ஆனால் இந்த வரத்தை விரயமாக்க நாமே ஓயாமல் போராடுகிறோம். மனிதனுக்கு மனிதனைத் தவிர வேறு எதிரி இல்லை. ஐம்புலன்கள் வழியாக, அடங்காத மனத்தின் பேராசையை நிரப்பும் கட்டுக்கடங்காத வெறியில் தன் இனம் முதல் அனைத்து உயிர்களையும் அழிக்க தயங்குவதில்லை.


செயல்களின் பலனில் விருப்பத்தை விலக்கி, முழு மனத்திறனுடன் செயல் புரியும் மனிதர்களே சிறந்த சமூக மனிதர்களாக, சமூகத்தின் வளர்ச்சிக்கும் நன்மைக்கும் ஆகப்பெரிய பங்களிப்பாளர்களாக, நிறைவான வாழ்க்கை வாழ்ந்த வெற்றியாளர்களாக இருக்க முடியும். அப்படி வாழ்ந்து காட்டிய எண்ணற்ற ஆளுமைகள் வரலாற்றில் உண்டு. ஆயிரத்தில் ஒரு ஆமைக்குஞ்சிற்குக் கிடைத்ததைப் போல, அத்தகையவர்களுக்கே உண்மையில் வாழ்வெனும் வரம் முழுமையாக கைவரப்பெறுகிறது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணிக்கு ஆதரவு இல்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கடந்த தினத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அரசியல் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப் பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை, எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகள் 11 உடன் இணைந்து ஐக்கிய தேசிய கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



இந்தக் கூட்டுக்கு எங்களை அழைக்கவில்லை. ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுக்கவில்லை. இது சாத்தியமாகும் என்று சொல்ல முடியாது. அவர்களது கூட்டில் ஐக்கிய தேசியக் கட்சியை தவிர, தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும், ஜனநாயக மக்கள் முன்னணிக்குமே மக்கள் செல்வாக்கு உள்ளது. மக்கள் ஆதரவுள்ளவர்களை இணைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.


# கிழக்கில் முதலீடு செய்ய சவுதி அரசாங்கம் விருப்பம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முதலீடு செய்தவற்கு சவுதி அரேபியா அரசாங்கம் முன்வந்துள்ளது என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

விவசாயம், கால்நடை, சுற்றுலா உள்ளிட்ட பல துறைகளில் கிழக்கு மாகாணம் உட்பட பல பிரதேசங்களில் சவுதி அரேபியா அரசாங்கம் முதலீடு செய்யவுள்ளது என அவர் குறிப்பிட்டார்..

இதற்காக ஆறு பேர் கொண்ட சவுதி அரேபிய தூதுக்குழுவொன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்க முக்கியஸ்தர்களைச் சந்தித்து



முதலீடு தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளது என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த தூதுக்குழுவினர் பாசிக்குடா மற்றும் புத்தளம் உள்ளிட்ட பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு முதலீட்டுக்கான சாதகங்களை பார்வையிடவுள்ளனர் என அவர மேலும் தெரிவித்தார்.

சவுதி அரேபியா ஏற்கனவே பல மில்லியன் ரூபா முதலீடுகளை இலங்கையில் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளியல் கொலையாளிகளின் நடவடிக்கைகளை ஏற்க முடியாது

(கொழும்பு)



நிதி அமைச்சின் பொருளியல் கொலையாளிகளின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் சில மோசடியான அதிகாரிகள் இந்த நாட்டைப் பாதாளத்திற்கு இட்டுச் செல்கின்றனர். நிதி அமைச்சின் செயலாளர் நாட்டை சீரழிக்க முயற்சிக்கின்றார்.

மேலும் நல்ல செயற்திட்டங்களை முன்னெடுக்கும் நபர்களுக்கு தடைகளை ஏற்படுத்தி வருகின்றார். நாட்டுக்கு சேவையாற்றவே நாம் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டோம்.

கொள்ளையிடுவதற்காக அல்ல. நாட்டின் மிகச் சிறந்த அமைச்சுச் செயலாளராக பாதுகாபபுச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவைக் கருத முடியும். அவர் ஏனைய செயலாளர்களுக்கு முன்னுத்தாரணமாகத் திகழ்கின்றார் என்றார்.

# பலாத்காரமாக வழங்கப்பட்ட அரச காணிகள் குறித்து அறிவிக்கவும்

(கொழும்பு)

அரச காணிகளைச் சட்டவிரோதமாகவும் பலாத்காரமாகவும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்காக பெறப்பட்டமை தொடர்பான தகவல்களை வழங்கும்படி ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு அரசாங்கத்தை கோரியுள்ளது.

பிரதானமாக புத்தளம் மொனராகலை, மன்னார், திருகோணமலை அடங்கலாக பல இடங்களில் 25 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 36,611 ஹெக்டேயர் நிலம் சட்டவிரோதமாகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மொனராகலையில் 8,703 ஹெக்டெயர் காணி பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால், மொனராகலை மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுலாத்துறை, மீன்வளர்ப்பு, உப்பு உற்பத்தி, கைதொழில்கள், சுரங்கத்தொழில், விவசாயம், சக்தி, பலநோக்கு நீர்ப்பாசனம் ஆகிய எட்டு அபிவிருத்தி வகைகள் தமது ஆய்வில் இனங்காணப்பட்டுள்ளன எனவும் இவற்றின் காரணமாக பலர் தமது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்



டுள்ளதாகவும் தொழிற்சங்கத் தலைவர் சமன் ரத்னபியி கூறினார்.

இவர்கள் காணிகளை எடுத்து மக்களை வெளியேறறி சுற்றுச்சூழல் கொள்கைகளை அலட்சியம் செய்து, நீதிமன்றக் கட்டளைகளை மீறி கேள்விப் பத்திம் கோராமல் தமது செயற்திட்டங்களை செயற்படுத்துகின்றனர் என சுற்றுச்சூழல் பேணுதல் நம்பிக்கைப் பொறுப்பு அமைப்பின் தலைவர் திலக்காரியவசம் தெரிவித்துள்ளார்.

# காலிமுகத்திடலில் ஜே.வி.பி. காதலர் தினம்

(கொழும்பு)

உலக காதலர் தினமான நேற்று ஜே.வி.பி கட்சி காதலர் தினக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டது. காலி முகத்திட லில் விசேட கொண்டாட்டங்களும் நடாத்தப்பட்டன.

காதல்தினம் வர்த்தகப் பண்டங்களை விற்பனை செய்வதற்கான நாள் மட்டுமல்ல, என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

சமூகப் பிரச்சினைகள் குறித்தும் பேசக்கூடிய நாளாக இது அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ரோமின் சர்வாதிகாரி க்ளேடியஸிற்கு எதிர்ப்பை வெளியிடும் நாளாகவும் காதலர் தினத்தை கருத முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரோமில் குடும்ப சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்ட க்ளேடியஸிற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

காலி முகத்திடலில நடைபெறவுள்ள ஜே.வி.பி காதலர் தினக் கொண்டாட்டங்களில் இசை நிகழ்ச்சி, நாடகம் மற்றும் சொற்பொழிவுகள் நடைபெறறன.

காலனித்துவ மற்றும் முதலாளித்துவத்திற்கு எதிரான இடதுசாரி கட்சியாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஜே.வி.பி.முதல் தடவையாக இம்முறை காதலர் தினக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டது.

# முறைப்பாடுகள் குறைவு

(கொழும்பு)

இலங்கை கணனி அவசர மறுமொழி பிரிவுக்கு வருகின்ற முறைபாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அதன் பாதுகாப்பு பொறியியலாளர் ரொசான் சந்திகுப்தா இதனைத் தெரிவித்துள்ளார்.

கணனி மற்றும் இணையத் தளங்களில் இடம்பெறுகின்ற மோசடிகள் தொடர்பில் கடந்த காலங்களில் இந்தப் பிரிவுக்கு இலங்கையில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வந்தன. எனினும் தற்போது கணனி மற்றும் இணையத் தளங்கள் தொடர்பில் பொது மக்கள் போதிய அறிவினைக் கொண்டுள்ள நிலையில், இவற்றின் ஊடாக மோசடிகளும் குறைவடைந்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சூரியப்புயலால் எமக்கு பாதிப்பில்லை இலங்கை விஞ்ஞான ஆய்வு நிறுவனம் தகவல்

154 வருடங்களுக்கு பின்னர் சூரியப் புயல் பூமியை தாக்கப் போவதாக வெளியான செய்தி தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆர்தர் சி கிளார்க் நிறுவன ஆலோசகர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளதாவது,

சூரியப் புயல் பூமிக்கு தாக்கத்தை ஏற்படுத்தாது. கடந்த 9 ஆம் திகதி அதிகாலை 2.30 இற்கு ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இது பூமியை வந்தடைய மூன்று நாட்கள் வரை எடுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த சூரியப்புயலால் பூமியின் தொலைத்தொடர்புகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. சூரியனிலிருந்து வெளியாகும் கதிரியக்கம் மணித்தியாலத்துக்கு பல மில்லியன் தூரம் பயணிக்கும். சிலவேளைகளில் அது பூமியையும் தாக்ககூடும்.

எனினும் தாக்குதல் இடம் பெறுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வரை அதனை எதிர்வு கூறமுடியாது என்றார். சூரியப் புயல், 100 முதல் 200 வருடங்களுக்கு ஒருமுறை நிகழ்கிறது. கடைசியாக அது 1859 ஆம் ஆண்டு நிகழ்நதது. 1989 ஆம ஆண்டு ஏற்பட்ட சிறிய புயலால் கனடாவன் மின்சாரத் தொகுதியில் பாதிப்பு ஏற்பட்டமை குறிபபிடத்தக்கது.

# நிதி நிறுவன கிளை பணிப்பாளர் மரத்தின் மேல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஆனமடு பால் உற்பத்தியாளர்கள் கடன் பிரச்சினையைத் தீர்ககச் சென்று காணாமற போன தாகக் கூறப்பட்ட பிரபல நிதி நிறுவன கிளை பணிப்பாளர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பிரசித்தி பெற்ற நிதி நிறுவனம் ஒன்றின் நுகேகொட கிளை பணிப்பாளர் டி.எம்.பிரேமசிறி நேற்றுமுன்தினம் இரவு முதல் காணாமற போயுள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த பணிப்பாளரும் மற்றுமொருவரும் ஆனமடுவ பிரதேச பால் உற்பத்தியாளர்களின் கடன் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நேற்று முன்தினம் அங்கு சென்றனர்.

அங்கு சென்று மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தவேளை, ஆனமடுவ - தோணிகல காட்டுப பகுதியில் ஒரு இடத்தில் இறங்கி தேவை ஒன்றுக்காக குறித்த பணிப்பாளர் குழுவுடன் சிறிது தூரம் நடந்து சென்றுள்ளனர்.

அவ்வாறு சென்ற குழுவில், பணிப்பாளர் காணாமற்போன தாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பணிப்பாளரை தேடிப் பொலிஸ் குழுக்கள் காட்டுப் பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர். இந்நிலையில் தோணிகல காட்டு மரம் ஒன்றில் ஏறியிருந்த நிலையில் பணிப்பாளர் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்குள் சென்று திரும்பிபோது பாதையை மறந்து அலைந்து திரிந்ததாகவும் பின்னர் செய்வதறியாது பாதுகாப்புக்காக மரத்திற்கு மேல் ஏறியிருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்ட பணிப்பாளர் கூறியுள்ளார்.

# நுரைச்சோலை மின் நிலையத்தை சீன கம்பனிக்கு வழங்க ஏற்பாடு



(கொழும்பு)

1350 மில்லியன் அமெரிக்க டொலர் பெருங்கடனுக்குப் பதிலாக நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்த சீனக் கம்பனிக்கு அதை கொடுத்துவிடுவதற்கான பேச்சு வார்த்தைகள் நடை பெறுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதிகரித்துவரும் மின்னுற்பத்திச் செலவீனத்தை சமாளிப்பதற்காக 2 தெரிவுகளை இலங்கை மின்சாரசபை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது. மின்கட்டணத்தை உயர்த்துவது அல்லது இந்த அனல் மின் நிலையத்தை அதனை அமைத்த சீனக் கம்பனியான சி.எம்.சி.ஆர். இடம் கொடுத்து விடுதல் என்பவையே இம் மாற்று யோசனைகளாகும்.


அரசாங்கம் இரண்டாவது தெரிவையே விரும்புவதாக அறியப்படுகின்றது.

இம்மின் நிலையம் முதற் கட்டத்தில் 300 மெகவாட்ஸ் மின்னை முதற்கட்டத்திலும் மீதியை இரண்டாம் கட்டத்திலும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.


புற்றளை மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றபோது வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ரஞ்சிதம் குட்டித்தம்பி மங்கள விளக்கேற்றுவதையும், பருத்தித்துறை பங்குத்தந்தை ஜோன்மௌலிஸ் அடிகளார் உரையாற்றுவதையும், 2 ஆம் தர மாணவர்கள் 1 ஆம் தர மாணவர்களை வரவேற்பதற்கு ஆயத்தமாக இருப்பதனையும் காணலாம். (01)

# உயர்தரப் பெறுபேறுகள் மட்டும் கல்வி வளர்ச்சியை மதிப்பிடாது



வட மாகாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளின் பெறுபெறுகளை வைத்துக்கொண்டு மாகாணத்தின் கல்வி வளர்ச்சியினை மதிப்பிடமுடியாது என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி - பாரதிபுரம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வியில் நகரங்கள் கிராமங்கள் என்ற வேறுபாடின்றி வளர்த்தெடுக்கவேண்டிய தேவையுள்ளது. இந்த வேறுபாடுகளுக்கு முன்னேற்றம் அடைகின்ற கல்வி வளர்ச்சியே கல்வித்துறையில் ஏற்படுகின்ற வளர்ச்சியாகக் கொள்ளமுடியும் அதனை நோக்கி எமது பிரதேசங்களின் கல்வியினை கொண்டு செல்லவேண்டும்.

பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற போது பெறப்படுகின்ற அன்பளிப்பு (டொனேசன்) தொகை இலட்சங்களை தாண்டி செல்கிறது. இது ஒரு சட்டவிரோதமான செயல் என்கின்ற போதும, ஏதோ ஒரு வகையில் இடம் பெற்றுக்கொண்டே இருக்கிறது இதனால் ஏழை மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளில் இடம்கிடைப்பதே இல்லை. எனவேதான் ஏற்றத்தாழ்வுகள் அற்ற கல்வி வளர்ச்சியினை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

மேலும் தற்போது வெளியாகியுள்ள' உயர்தர பெறுபேறுகள் எமது பிரதேசத்தின் கல்வித்துறையின் முன்னேற்றம் குறித்த நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. யுத்த சூழலில் இருந்து நாம் மீண்டுள்ளோம். எனவே இந்த முன்னேற்றங்கள் தொடர்ந்தும் எதிர்காலத்தில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனத்தெரிவித்தார்.

பாடசாலை முதல்வர் பெருமாள் கணேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி, கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுத்தலைவர் பத்மநாதன், ஓய்வுப்பெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர் சின்னராசா, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி அமைப்பாளர் தவநாதன், ஏனைய பாட சாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# முறைசார கல்விப்பிரிவின் தொழில் பயிற்சி நெறிகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் இவ்வாண்டு யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயம், யாக்கரு விநாயகர் வித்தியாலயம், கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மாமுனை கணனி நிலையம், ஸ்ரீ நாரதா வித்தியாலயம், (இராஜ கிராம சனசமூக நிலையம்) அகிய நிலையங்களில் தொழில் பயிற்சி நெறிகள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கு இம்மாதம் 28 ஆம் திகதி முன் சமர்பபித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் பயிற்சி முடிவில் தொழில் தகைமைச், சான்றிதழ் வழங்கப்படும் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)

## பேடன் பவல் போட்டிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கத்தினரின் பேடன் பவல் நினைவையொட்டி நடத்தப்படவுள்ள போட்டிகள் யாவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

போட்டியில் பங்குபெறும் சகல குருளை சாரணர்கள், சாரணர்கள், பெண் சாரணியர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் மு.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (109)

# கைதடி இரும்புப்பாலம் துரித கதியில் புனரமைப்பு

## – தினமுரசு செய்திக்கு பலன்

(சாவகச்சேரி)

கைதடி இரும்புப்பாலம் கடந்த வாரம் சேதமடைந்திருந்தமை சுட்டிக்காட்டியபின் துரித கதியில் திருத்தப்பட்டது.

கடந்த வாரம் கைதடிப்பாலத்தின் இரும்புத் தகடுகள் 5 கிழிந்த நிலையில் காணப்பட்டதால் வாகனப்போக்குவரத்து இப்பாலத்தில் மிக அபாயகரமாக காணப்பட்டது. இதனால் பல வாகன ரயர்கள் சேதமடைந்ததாக சாரதிகள் பலர் முறையிட்டதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இதுபற்றி தினமுரசு படத்துடன் செய்தி பிரசுரித்தது.

இதையடுத்து செவ்வாய்க்கிழமையே இப்பாலத்தின் போக்குவரத்துப் பாதையின் ஒருபகுதி மூடப்பட்டு அதன் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இரும்புத்தகடுகள் கழற்றி மாற்றப் பட்டு உடனடியாக இப்பாதையில் போக்குவரத்து செய்யக்கூடிய வகையில் இரவோடு இரவாக நிறைவடைந்துள்ளன.

இப்பணிகள் நிறைவடைய உதவிய அனைவருக்கும் குறிப்பாக தினமுரசுக்கும் நன்றி தெரிவிப்பதாக தனியார் சிற்றூர்திச் சேவை சாரதிகள் தெரிவித்தனர். (43)

# புதிய நிர்வாகத் தெரிவு

வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக காத்தமுத்து றஞ்சனதாஸ், உபதலைவராக பொன்னம்பலம் சிவானந்தம், செயலாளராக பூபாலகிஷ்ணசாமி அகமணிதேவர், உபசெயலாளராக இரத்தினசாமி சண்முகதாஸ், பொருளாளராக துரைசாமி சக்திவேல் ஆகியோருடன்,

நிர்வாகசபை உறுப்பினர்களாக இராமதாஸன் இராஜேந்திரா, பாலசுப்பிரமணியம் மீனாட்சிசுந்தரம், பொன்னம்பலம் சிவஞானசுந்தரம், சங்கர் கிருஷாந், நடராஜா யோகீஸ்வரராஜா, விசாகப் பெருமாள் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், சர்வதேச இணைப்பாளராக ந.சீவரெத்தினம், கணக்காய்வளராக ஆ.நாகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# முரசின் இன்றைய பலன்

(15.02.2013 – வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 26 ஆம் திகதி.
நட்சத்திரம் ரேவதி காலை 7.08 வரை. திதி பஞ்சமி
பிற்பகல் 12.17 வரை. இராகுகாலம் 11.03 - 12.33 வரை.
சுபநேரம் 6.33 - 08.03 வரை. அமிர்தம், ஷஷ்டி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நண்பரின் உதவியால், பெருமை. மனதில் உற்சாகம், செயலில் பரிமளிப்பு. தொழில், வளர்ச்சி. கடன் தீரும். விருந்தும் மகிழ்வும். புதிய பதவிப் பொறுப்பு. |
| ரிஷபம் | உண்மை, நேர்மை பின்பற்றுவீர்கள். தொடங்குகிற பணி எளிதாகும். தொழில், வியப்பூட்டும் வளர்ச்சி. உபரிவரவு. சேமிப்பீர்கள். |
| மிதுனம் | தகுதி, திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். நம்பிக்கை இழந்திருந்த செயல் வெற்றி பெறும். உற்சாகம். தொழில், திருப்தி. கூடுதல் பணவரவு. |
| கடகம் | சிலரது அறிவுரை, தர்மசங்கடம் உருவாக்கும். புதிய முயற்சிகள் வேண்டாம். தொழில், சராசரி. வரவு முக்கிய செலவுக்கு பயன்படும். |
| சிம்மம் | உறவினரால் தொந்தரவு. முக்கிய பணி ஒன்று தாமதம். தொழிலில், முழு ஈடுபாடு. பணவரவு சுமாா. சிறு மருத்துவ சிகிச்சை. புது நட்பு. |
| கன்னி | மனதில் சஞ்சலம் தோன்றி மறையும். பகை விலகுவது நல்லது. தொழில், வேலைச் சுமை. முக்கிய தேவைக்கு எதிர்பார்த்த பணம் கிடைக்கும். |
| துலாம் | செயலில் அதிக நேர்த்தி. பாசத்திற்கு உரியவர்கள் பாராட்டுவர். தொழில், இலக்கு நிறைவேறும். சேமிக்கும் வகையில் பணவரவு. |
| விருச்சிகம் | சுற்றி நடக்கிற நிகழ்வுகளில் கவனம். அவமதித்தவர் அன்பு பாராட்டுவர். தாராள பணவரவு. பெண்களுக்கு நல்யோகம் உண்டு. எதிர்கால முழவுகள். |
| தனுசு | யாரிடமும் உதவி கேட்க வேண்டாம். தொழிலில், தொந்தரவு. செலவு வரும். போட்டியில் ஜெயிக்க கடும் பிரயத்தனம். வீம்புக்கு சிலது செய்வீர்கள். |
| மகரம் | கெடுமதி உள்ள ஒருவரால் தொல்லை. சமயோசிதமான செயலால் நன்மை. தொழில், அதிக பணி. பணவரவில் தாமதம். உணவில் கவனம். |
| கும்பம் | இடையூறு செய்பவரை அறிவீர்கள். சிக்கல் தீர்ப்பதில் நேரம் கழியும். கடும் முயற்சிக்கு நன்மை. தொழில் சீராக இருக்கும். கடன் திரும்பும். |
| மீனம் | நன்மை மறந்த ஒருவரை மன்னிப்பீர்கள். சமூக நிகழ்வுகளில் ஈடுபாடு. தொழில், செழிப்பு. அதிக பணவரவு. அன்பு ஓங்கும். பிள்ளைகளால் புகழ். |

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் கு. ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண்முககுலகுமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

*

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் கே.கே. தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோவிந்தபிள்ளை வரதராஜமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (10)

*

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை தினம் பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் வே.க. இரத்தினகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (17)

*

பொலிகண்டி இந்து த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் க. சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்(109)

*

ஆனைக்கோட்டை-உயரப்புலம் குணபாலன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை தினம் பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் நா. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

## டெஸ்ட், ஒரு நாள் கப்டனாக மத்தியூஸ்



(கொழும்பு)

பங்களாதேஷ் அணியுடன் இடம்பெறவுள் டெஸ்ட் தொடருக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை டெஸ்ட், ஒருநாள் போட்டி அணித் தலை வராக அன்ஜலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் தலைவராக இதுவரை காலமும் செயற்பட்ட மஹேல ஜெயவர்தன அப்பதவியிலிருந்து விலகியதையடுத்து ஏற்பட்ட இடைவெளிக்கே அன்ஜலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார். டெஸ்ட், ஒருநாள் போட்டிகளின் தலைவராகவே அவர் அறிவிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் இலங்கையின் ருவென்ரி-20 அணியின் தலைவராக அன்ஜலோ மத்தியூஸ் செயற்பட்டு வந்த நிலையில் அவருக்குப் பதிலாக டினேஷ் சந்திமால் அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். டெஸ்ட், ஒருநாள் போட்டிகளின் உப தலைவராக டினேஷ் சந்திமால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ருவென்ரி-20 போட்டிகளின் அணித்தலைவராக வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, அறிவிக்கப்பட்டுள்ள டெஸ்ட் குழாமில் இலங்கையின் சிரேஷ்ட வீரர்களான திலான் சமரவீர, பிரசன்ன ஜெயவர்தன, தரங்க பரணவிதான ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.. அறிவிக்கப்பட்டுள்ள டெஸ்ட் குழாம்: அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், திலகரட்ண டில்சான், திமுத் கருணாரத்ன, ஆஷென் சில்வா, குமார் சங்கக்கார, லஹிரு திரிமன்ன, மஹேல ஜெயவர்தன, குஷால் ஜனித் பெரேரா, ஜீவன் மென்டிஸ், கித்துருவன் வித்தானகே, அஜந்த மென்டிஸ், சுராஜ் ரண்டீவ், நுவான் குலசேகர, ஷமின்ட எரங்க, சானக வெலகதெர, நுவான் பிரதீப், துஷ்மந்த சமீர, ரங்கன ஹேரத், தரிந்து கௌஷால்.

## பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திற்குத் தடை



(லாசேன்)

அரசியல் தலையீடு காரணமாக, பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திற்கு சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஒ.சி.,) தடை விதிக்கவுள்ளது.

கடந்த சில மாதங்களாக பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்க அதிகாரிகள், தங்களின் நிர்வாகத்தில் அரசு தலையிடுவதாக புகார் தெரிவித்தனர். இதையடுத்து ஐ.ஒ.சி. பாகிஸ்தான் அரசை, பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. ஆனால் பாகிஸ்தான் அரசு இதை நிராகரித்தது. இதையடுத்து பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திற்கு ஐ.ஒ.சி., தடைவிதிக்க முடிவு செய்துள்ளது.

ஐ.ஒ.சி. ஒருநாட்டு ஒலிம்பிக் சங்கத்திற்கு தடைவிதித்தால், அந்நாட்டு ஒலிம்பிக் சங்கத்திற்கு வழங்கப்படும் நிதியுதவிகள் நிறுத்தப்படும். தவிர, சர்வதேச ஒலிம்பிக் சங்கம் நடத்தும் எந்த போட்டியிலும், வீர, வீராங்கனைகள் அந்நாட்டு தேசியக் கொடியுடன் பங்கேற்க முடியாது. ஆனால் ஐ.ஒ.சி. கொடியுடன் வீரர்கள் பங்கேற்கலாம்.

இது குறித்து ஐ.ஒ.சி., அதிகாரி மார்க் ஆடம்ஸ் கூறுகையில், பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்திடம் இருந்து புகார் வந்ததை தொடர்ந்து அந்நாட்டு அரசை பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம். அதை அந்நாட்டு அரசு நிராகரித்துவிட்டது. அதனால் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## 3ஆவது சுற்றில் ஷரபோவா

கட்டார் டோட்டல் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, ரஷ்யாவின் மரியா ஷரபோவா தகுதி பெற்றார். இரண்டாவது சுற்றில் பிரான்ஸ் வீராங்கனை கரோலின் கார்சியாவுடன் நேற்று முன்தினம் மோதிய ஷரபோவா 6-3, 6-2 என்ற நேர் செட்களில் எளிதாக வென்றார். மற்றொரு 2வது சுற்று ஆட்டத்தில் முன்னணி வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6-2, 6-1 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் டாரியா காவ்ரிலோவாவை வீழ்த்தினார். ஜேர்மனியின் மோனா பார்தெல் 6-1, 6-2 என்ற நேர் செட்களில் சக வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பரை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## ஊக்கமருந்து சோதனை சிக்கினார் ரஷ்ய வீரர்



2004ஆம் ஆண்டு ஏதென்சில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பளு தூக்குதலில் 77 கிலோ உடல் எடைப்பிரிவில் ரஷ்ய வீரர் ஒலெக் பெரேபெட்ச்னோவ்ஸ் வெண்கலப்பதக்கம் வென்றார். அவருக்கு 2ஆவது முறையாக நடத்தப்பட்ட மாதிரி பரிசோதனையில் ஊக்க மருந்து பயன்படுத்தியது உறுதியானது. இதனைத் தொடர்ந்து ஒலிம்பிக்கில் வென்ற வெண்கலப்பதக்கத்தை எவ்வளவு சீக்கிரம் திரும்ப ஒப்படைக்க முடியுமோ? அவ்வளவு சீக்கிரத்தில் ஒப்படையுங்கள் என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் ரஷ்ய ஒலிம்பிக் சங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது. இது குறித்து ஒலெக் பெரேபெட்ச்வோவ்ஸ் கருத்து தெரிவிக்கையில், 2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கு முன்பும், பின்பும் எனக்கு நடத்தப்பட்ட மருத்துவ சோதனையும் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் தற்போது எனக்கு நடத்தப்பட்ட சோதனையில் பளுதூக்கும் வீரருக்கு தேவையில்லாத ஊக்க மருந்தைப் பயன்படுத்தியதாக அற்பத்தனமாக சொல்வது எப்படி நியாயமானதாக ஏற்றுக்கொள்ள முடியும் என்றார். 37 வயதான ஒலெக் 2010ஆம் ஆண்டில் பளுதூக்குதலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




## 16 ஆண்டுகளுக்குப் பின் சாதித்த தீவுகள்

ருவென்ரி-20 போட்டியில் அசத்திய மேற்கிந்தியத்தீவுகள் அணி, அவுஸ்ரேலிய அணியை 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அவுஸ்ரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரே ஒரு ருவென்ரி-20 போட்டியில் பங்கேற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சார்லஸ் ஏழு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 57, போலாட் 26, சமி 20 ஓட்டங்களைப் பெற்றனர். கடின இலக்கு நோக்கி ஆடிய அவுஸ்ரேலிய அணி மேற்கிந்தியத்தீவு அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வோக்ஸ் 51, ஹடின் 22, பெய்லி 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்திய போலாட் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இதேவேளை, அவுஸ்ரேலிய மண்ணில் 16 ஆண்டுகளுக்குப் பின் தனது முதல் வெற்றியை மேற்கிந்தியத்தீவுகள் அணி பதிவு செய்தது. கடைசியாக 1997இல் பேர்த்தில் நடந்த டெஸ்டில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, அவுஸ்ரேலிய அணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

## அனுசரணையாளர்கள் போட்டி

(கொழும்பு)

இலங்கைத் தேசியக் கிரிக்கெட் அணிக்கான அனுசரணைக்கு நிறுவனங்களிடையே போட்டி ஏற்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அத்தோடு வரலாறு காணாத அளவுக்கு ஏலத்தொகை அமைந்துள்ளதாகவும் அது மேலும் அறிவித்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தற்போதைய அனுசரணையாளர்களான மொபிடெல் நிறுவனம் தனது அனுசரணையைப் புதுப்பிக்காது விட முடிவுசெய்ததையடுத்து புதிய அனுசரணைக்கான ஏலங்களை இலங்கை கிரிக்கெட் சபை கோரியிருந்தது.இந்நிலையில் முன்னெப்போதும் இல்லாதவாறு பில்லியன் கணக்கான ஏலத்தொகை பெறப்பட்டிருப்பதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கையின் முன்னணிக் கைத்தொலைபேசி வலையமைப்பான டயலொக் அக்ஸியற்றா, இலங்கைத் தேயிலைச் சபை, மடிசன் மீடியா மற்றும் ரோற்றல் ஸ்போர்ட்ஸ் ஏசியா ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும், இவற்றில் 2 நிறுவனங்கள் 2 பில்லியனுக்கும் அதிகமான ஏலத்தொகையைக் கோரியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதில் அனுசரணையாளராகத் தெரிவுசெய்யப்படுபவர் இலங்கையின் பெண்கள், ஆண்கள் தேசிய அணிகளின் அனுசரணையாளர்களாகச் செயற்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பாகிஸ்தான் மீண்டும் சொதப்பல்

(டர்பன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது போட்டியிலும் பாகிஸ்தான் அணி மீண்டும் சொதப்பி வருகின்றது. தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி தென்னாபிரிக்காவின் டர்பனில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி, ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை விரைவாகப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்கு விக்கெட்டுக்களை இழந்திருந்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த அசாட் சபீக், யுனிஸ்கானுடன் இணைந்து பொறுப்பாக ஆடினார். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் மதிய இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை, பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் யுனிஸ்கான் 25, அசாட் சபீக் 19 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர். பந்து வீச்சில் மோர்கல் இரண்டு, ஸ்டெயின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.


ஏற்கனவே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



## கம்பீர் நீக்கம்; இந்தியாவுக்கு பின்னடைவு

இந்திய அணியில் இருந்து கம்பீர் நீக்கப்பட்டுள்ளார். அவரது நீக்கம் மிகப்பெரிய பின்னடைவாக இருக்கும். அவுஸ்ரேலிய வீரர்களை எதிர்கொள்வதில் அவர் கெட்டிக்காரர் என அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் ஹைய்டன் தெரிவித்தார். ஹர்பஜன்சிங் மீண்டும் தேர்வாகி இருப்பது இந்திய அணிக்கு சிறப்பானதே. அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அவர் எப்போதுமே தாக்கத்தை ஏற்படுத்துவார். ராவிட், லட்க்மன் ஓய்வால் அவுஸ்ரேலிய அணி நிம்மதி அடைந்திருக்கும். இருவரும் 2001ஆம் ஆண்டு கொல்கத்தா டெஸ்டில் ஆடிய அபாரமான ஆட்டத்தை யாராலும் மறக்க இயலாது. அவுஸ்ரேலிய அணியில் தலைசிறந்த வீரர்கள் இருப்பதால் இந்த டெஸ்ட் தொடரை நம்பிக்கையோடு எதிர்கொள்வார்கள். கப்டன் கிளார்க்குக்கு இந்த டெஸ்ட் தொடர் கூடுதல் நெருக்கடியாக இருக்கும் என்று நினைக்கவில்லை. அவர் இந்தியாவுக்கு எதிராகத் தான் அறிமுகம் ஆனார். கடந்த சில ஆண்டுகளாக அவரது துடுப்பாட்டம் சிறப்பாக உள்ளது. நெருக்கடியை எப்படி சமாளிப்பது என்பது அவருக்கு நன்றாக தெரியும். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து சுழற்பந்து வீரர்கள் ஸ்வான், பனேசர் சிறப்பாக செயற்பட்டார்கள். அது மாதிரியாக சிறந்த சுழற்பந்து அவுஸ்ரேலிய அணியில் இல்லை. ஆனால் வேகப்பந்து வீச்சு சமபலம் வாய்ந்ததாக உள்ளது. பீற்றர் சிடில், பேட்டின்சன், மைக்கல் ஸ்டார்க் ஆகியோர் சிறந்த வேகப்பந்து வீரர்கள் ஆவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டான வாழ்வக மாணவனின் சாதனை



நாங்கள் முயலாமல் இருக்கும் வரை எதுவும் முடியாது. முடியும் என எண்ணுகையில் முயற்சி நிச்சயம் திருவினையாக்கும். உலக வரலாற்றில் இவற்றிக்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு. அதனை கேட்டோ, வாசித்தோ, யாரும் சொல்லியோ நாம் அறிந்திருப்போம். இதுபுராணக் கதையாகவோ, எங்கள் நாட்டில் நடக்காததொன்றாகவோ இருக்கலாம்.

ஆனால், முடியும் என்பதற்கு எங்கள் நாட்டில் வடபகுதியில், யாழ்ப்பாணத்தில் ஓர் எடுத்துக்காட்டு நிகழ்த்திருக்கிறது. எங்கள் கண்கள் இதை நம்புமோ இல்லையோ, செவிப்புலனற்ற விஜயகுமார் விஜயலாதன் அண்மைய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். இலங்கையின் முன்மாதிரியாக, எங்களுக்கு எடுத்துக்காட்டாக தன்னை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டுநடத்தப்பட்ட மரதன்ஓட்டப் போட்டியின் மூலம் விஜயலாதன் எங்களுக்கு முன்மாதிரியாகி, இன்று அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட தெருவோட்ட நிகழ்வில், மாற்றுத்திறனுடைய (பூரண பார்வையற்ற) விஜயகுமார் விஜயலாதன், ஏனைய வீரர்களுடன் ஓடி முடித்திருக்கின்றார். மருதனார்மடத்திலிருந்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வரையிலான எட்டு கிலோ மீற்றர் தூரத்தினை வெற்றிகரமாக ஓடி முடித்து, முடியும் என்பதற்கு மீண்டுமொரு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்திருக்கிறார்.

இந்தவகையில் விஜயலாதனைநேரில் சென்று பாராட்டி, சிறிது நேரம் அவருடன் உரையாடினோம். எங்கள்வாசகர்களுக்கு அவர் சொல்ல நினைத்ததைப் பதிவாக்கியிருக்கின்றோம்.

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இரு கண் பார்வையை 20 வயதில் நான் இழந்தேன். கண் இழந்த போதும் நான் மனம் தளரவில்லை. 'பிரெயில் மொழி மூலம் கல்வியைத் தொடர் முயன்றேன்.தற்போதுஅதன்பயனாக O/L பரீட்சைக்குத் தோற்றி,தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் உயர்தர கலை வகுப்பில் கல்வியைத்தொடர்கின்றேன். பாடசாலை இடம் பெறும் போட்டிகளில் சாதாரண மாணவர்களுடன் பங்குபற்றும்போது வெற்றிகள் கிடைக்காவிட்டாலும் அதன் மூலம் மிகுந்த மகிழ்ச்சிநிலையை நான் அடைந்தேன். பார்வைக் குறைபாடுடையவர்கள் விளையாட்டு நிகழ்வுகளில் சாதாரண மாணவர்களுடன் இணைந்து இயங்குவதென்பது மிகக் கடினமானதொன்று. இருப்பினும், நுட்பமான பயிற்சிகளினூடும், தொடர்ச்சியான வழிகாட்டலினூடும் இது சாத்தியமாக்கப்பட்டுள்ளது என்றே நான் கருதுவேன்.


பயிற்சியாளர், பார்வைக்குறைபாடு உடையவர்கள் பற்றியும், விளையாட்டுக்கள் பற்றியும் பூரணமாக அறிந்தவராக இருப்பது அவசியம். மேலும் பயிற்சிகள் இறுதிப் போட்டியன்று ஓடும் திடலிலும், அதே தெருவிலும் வழங்கப்படல் வேண்டும். அப்போதுதான் நான் தெருவின்நிலைகள்,விளைவுகள்,அசாதாரண சூழ்நிலைகள் என்பவைகுறித்து அறிந்து கொள்ள முடியும்.போட்டியொன்றில் ஓடும்போது சாதாரண மாணவன் பார்வையூடாக உள்வாங்கும் விடயங்களை நாம் காதினூடு கேட்டல் வடிவில் பெற்றுக்கொள்ளவேண்டும்அதாவது, எனது ஓட்டம் ஆரம்பமாகியது முதல் நிறைவு பெறும் வரை ஐந்து அடி இடைவெளியில், வழிகாட்டுநராகிய எனது பயிற்சி ஆசிரியர் வந்து கொண்டிருந்தார். அவரது கட்டளைகளை மிகச் சரியாகச் செவிமடுத்து இலக்கினை அடைந்தேன்.

எம்மைப் போன்றவர்கள் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றும் போது அதிக பயிற்சியும், சிறப்பான வழிகாட்டுதலும் தேவை. நான் பயிற்சிக்காலத்தில் உரிய திடலில் (தெருவில்) பலதடவைகள் பயிற்சியில் ஈடுபட்டமையே இலகுவாக ஓட்டத்தைப் பூர்த்தி செய்ய முடிந்தது.

பூரண பார்வையற்ற ஒருவர் தெருவோட்ட நிகழ்வில் சாதாரண மாணவர்களுடன் பங்குபற்றியிருப்பது பற்றி இதுவரை நாங்கள் அறிந்திருக்கவில்ல என பெரியோர்கள் கூறுவதை எண்ணும்போது என்னால் சாதிக்க முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்

எனது பூரண பார்வையற்ற நிலையினை எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் கண்களை கறுப்புத் துணியினால் மூடிக் கட்டியவாறு, வெள்ளைப் பிரம்பினைக் கையில் ஏந்தி ஓடினேன். மாற்றுத் திறனாளிகளுக்கு குறிப்பாக, பூரண பார்வை அற்றவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்களும், பயிற்சிகளும் சிறப்புற அமையுமாயின் சாதாரண மனிதர்களைப் போன்று எங்களாலும் சாதனைகள் படைக்க முடியும் என நம்புகின்றேன். ஓட்ட நிகழ்வில் பங்குபற்றுவதற்கு அனுமதி அளித்த கல்லூரி அதிபர் வி.கே. இரட்ணகுமார், எனக்கு வழிகாட்டியாக பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட விசேட கல்வி ஆசிரியர் வி. விஷ்ணுகரன், என்னை உற்சாக மூட்டி பாடசாலைச் சமூகம், வாழ்வகச் சமூகம் அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

இதேவேளை, க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் யூனியன் கல்லூரியில் கல்வி கற்றுவரும் வாழ்வகத்தைச் சேர்ந்த சொர்ணலிங்கம் தர்மதன் கலைப் பிரிவில் 3ஏ பெறுபேறுகளை பெற்று கல்வியிலும் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 17)



பயிற்சியாளருடன் விஜயலாதன்




# வென்றது உடுவில் மகளிர் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் கன்னியர் மடம் மகா வித்தியாலய பாடசாலையிடம் இழந்த வெற்றியை மீண்டும் உடுவில் மகளிர் கல்லூரி தனதாக்கிக்கொண்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த வேளையில் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற மாகாண மட்டப்போட்டி ஒன்றில் உடுவில் மகளிர் கல்லூரி 28-00 என்ற புள்ளிகள் கணக்கில் யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தை வெற்றிபெற்று மாகாண மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல்வேறு போட்டிகளின் இறுதிப் போட்டிகளில் இந்த இரண்டு பாடசாலை அணிகளும் மோதிக்கொண்ட போதிலும், கன்னியர் மடம் பாடசாலை அணியே சம்பியன் கிண்ணத்தைப் பெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் எபைசன் அக்னீயு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக உடுவில் மகளிர் கல்லூரி நிர்வாகத்தினால் நடத்தப்பட்ட இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றிபெற்று கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் இழந்த வெற்றியை மீண்டும் பலத்த போராட்டத்தின் பின்னர் தனதாக்கிக்கொண்டது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. பார்வையாளர்களை மிகவும் உற்சாகப்படுத்திய போட்டியாக இந்தப் போட்டி அமைந்திருந்ததுடன் பலப்பரீட்சை மிக்க போட்டியாகவும் காணப்பட்டது.

நான்காம் கால் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 6இற்கு 04 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 35இற்கு 26 புள்ளிகள் என்ற நிலையில் கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தை வெற்றிபெற்று ஏழு வருடங்களுக்கு முன்னர் கைவிட்டுப் போன வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகியாக உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கமலினிமில்சம், போட்டியின் தொடர் ஆட்ட நாயகியாக கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெயமதனியும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# யாழ். லீக் தோல்வி

அம்பாறை கால்பந்தாட்ட லீக் அணியினை எதிர்த்து யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணி மோதிய போட்டியில் அம்பாறை கால்பந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட லீக் தனது 44 அங்கத்துவ கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான கால்ப்பந்தாட்ட சுற்றுப்போட்டியினை தற்போது நடத்தி வருகின்றது.


இதற்கமைய கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்பாறையில் நடைபெற்ற போட்டியில் அம்பாறை கால்பந்தாட்ட லீக் அணியினை எதிர்த்து யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணி மோதியது.

போட்டி நேரம் முடிவடையும் வரையும் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை. போட்டியின் முடிவினைக் காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் அம்பாறை கால்பந்தாட்ட லீக் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# மல்யுத்தப் போட்டி நீக்கம்

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் இருந்து மல்யுத்தத்தை நீக்க சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சுவிட்சர்லாந்தில் நேற்று முன்தினம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் நடப்பு ஒலிம்பிக் அட்டவணையில் உள்ள 26 விளையாட்டுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. அப்போது மல்யுத்தத்தை நீக்கிவிட்டு வாள் வீச்சு, குதிரை சவாரி, நீச்சல், ஓட்டப்பந்தயம், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றை உள்ளிடக்கிய நவீன பென்டத்லான் போட்டிகளை சேர்க்க முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த முடிவு அதிகாரபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஒலிம்பிக் போட்டியில் இருந்து ஏதாவது ஒரு விளையாட்டை நீக்கினால்தான், ஒரு புதிய விளையாட்டை சேர்க்க முடியும். பிரதான விளையாட்டில் இருந்து மல்யுத்தம் நீக்கப்படுவதால் 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பேஸ்போல் - சொப்ட்போல், கராத்தே, ஸ்குவாஷ், ஸ்கேட்டிங் விளையாட்டுகள், மலையேற்றம், நீர்ச்சறுக்கு, ஆகிய 7 மற்ற விளையாட்டுகளுடன் மல்யுத்தம் இணையும். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இந்த முடிவு மே மாதம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டு பரிந்துரைக்கப்படும். அதன் பின்னர் ஆர்ஜென்ரீனாவில் செப்டெம்பர் மாதம் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி பொதுச்சபையில் இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். கடைசியாக 2005 ஆம் ஆண்டு பேஸ்போல் - சாப்ட்போல் விளையாட்டு நீக்கப்பட்டது. ரியோ டி ஜெனிரோவில் 2016 இல் நடைபெறும் ஒலிம்பிக்கில் கொல்ப், ரக்பி ஆகிய விளையாட்டுக்கள் சேர்க்கப்படுகின்றன.

தலைவலிக்கு நெற்றியில் தைலம் தடவிக்கொண்டு சூடு பறக்கத் தேய்த்தால் தலைவலி போய்விட்டதைப் போல் தோன்றும். ஆனால் போகாது. இதற்குப் பதிலாக வலது கையின் கட்டைவிரலை மேலிருந்து கீழாக பிடித்தபடி 14 முறை அழுத்தியும் பக்கவாட்டில் 14 முறை அழுத்தியும் விட்டால் படிப்படியாக தலைவலி குறையும். இந்த அழுத்தத்துக்குப் பெயர் அக்குபிரஷர், இந்த வகையான அழுத்தங்களை நமது கைகளிலும் கால்களிலும் உண்டாக்குவதின்



முறைகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். பின்னர் 4 என்ற புள்ளிக்குக் கீழே ஒரு நேர்கோட்டில் அழுத்தம் கொடுத்து மணிக்கட்டு ரேகை வரை வரவேண்டும். பின்னர் ஆட்காட்டி விரல் நுனியில் ஆரம்பித்து நேர் கோட்டில் அழுத்தம் கொடுத்துக் கொண்டே மணிக்கட்டு ரேகைக்குக் கீழே இரு புள்ளிகள் வரை வந்து அதே கோட்டில் திரும்பிச் சென்று விரல் நுனி வரை வரவேண்டும். இவ்வாறு மூன்று முறைகள் செய்ய வேண்டும். பின்னர் நடு விரல், மோதிர விரல், சிறு விரல் நுனிகளிலிருந்தும் நேர் கோட்டில். மணிக்கட்டு ரேகைக்குக் கீழே இரு புள்ளிகள் வரை வந்து திரும்ப விரல் நுனிக்குச்

# கை விரல்களில் இருக்கிறது மருத்துவம்!

மூலம் ஆஸ்மா, நீரிழிவு நோய், எலும்பு சம்பந்தமான பிரச்சினைகள், கல்லீரல் தொடர்பான பிரச்சினைகள் அனைத்திற்கும் மருந்தில்லா வைத்தியமாக, பக்க விளைகள் இல்லாத வைத்தியமாக அக்குபிரஷரை செய்யமுடியும் என்கிறார் அக்குபஞ்சர் மற்றும் அக்குபிரஷர் துறையில் நீண்ட நாள் அனுபவம் பெற்றிருக்கும் டாக்டர் ஜெயலட்சுமி. வலி நிவாரணம் தொடர்பாக 12 நூல்களை எழுதியிருக்கிறார். இந்த வைத்தியம் குறித்து அவர் மேலும் கூறியதாவது...

நம் உடலின் உட்புறமாக இயங்கும் சக்திதான் எல்லா உறுப்புக்களையும் இயங்கவைக்கின்றது. இதை சக்தி ஓட்டப்பாதைகள் என்பார்கள். உடல் முழுவதும் இப்படிப்பட்ட சக்தி ஓட்டப்பாதைகள் 12ஆம், மனித உடலின் முன்புறமும் பின்புறமுமாக இரண்டும் சேர்த்து 14 சக்தி ஓட்டப் பாதைகளில் சில குறிப்பிட்ட புள்ளிகளில் கொடுக்கப்படும் அழுத்தத்தைக் கொண்டு பல நோய்களைக் குணப்படுத்தலாம். இதற்கு அடுத்தகட்ட சிகிச்சைமுறைதான் ஒரேயொரு ஊசியைக் கொண்டு அளிக்கப்படும் அக்குபஞ்சர் சிகிச்சைமுறை.

உணவு உண்பதற்கு முன்பு அக்குபிரஷர் செய்வது சிறந்தது. தினமும் இருமுறை இரு உள்ளங்கைகளின் சக்தி ஓட்டப் பாதையின் புள்ளிகளில் முறையாக அழுத்தம் கொடுக்கவேண்டும். வலி உள்ள புள்ளிகள் ஒவ்வொன்றிலும் 14 முறைகள் அழுத்தம் கொடுத்தல் நலம். அழுத்தம் கொடுக்கும்போது மூச்சை உள்ளே இழுத்து, தளர்த்தும்போது மூச்சை வெளியே விட்டு செய்தால் அதிக பலன் கிட்டும். தினமும் அழுத்தம் கொடுத்தால், சில நாட்களில் வலி போய்விடும். வலி மறைந்துவிட்டால் அவ்வுறுப்பு குணமடைந்துவிட்டது என்று பொருள். நாளை வரும் நோய்க்கு இன்றே வலி தெரியும். இன்றே அழுத்தம் கொடுத்தால் நாளை வரும் நோய் வராமல் தடுக்கப்படும். ஆய்வுகூடத்தில் செய்யப்படும் பரிசோதனைகள் நோய் வந்த பிறகே நமக்குக் காட்டும். ஆனால் பிரதிபலிப்பு முறையில் நோய் வரும் முன்னரே நம்மை எச்சரிக்கும். வெறும் அழுத்தம் கொடுப்பதாலேயே நோய்கள் வராமல் தடுக்கப்படும்.

நமது கட்டை விரல் தலையைக் குறிக்கும். கட்டைவிரலில் காட்டப் பட்டுள்ள 1, 2, 3, 4 என்ற புள்ளிகள் முறையே மூளை, பிட்யூட்டரி சுரப்பி, பினியல் சுரப்பி, மூளை நரம்புகள் இவற்றைக் குறிக்கும். இந்த நான்கும் மிக முக்கியமான உறுப்புகளாகும். இதை ஒவ்வொரு புள்ளியிலும் 7 செல்லவேண்டும். இதுபோல் மூன்று முறைகள் செய்யும்போது ஒவ்வொரு புள்ளியிலும் 6 முறைகள் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இதுபோல் செய்யும்போது உடலின் அனைத்து பிரதிபலிப்புப் புள்ளிகளும் தூண்டப் படுகின்றன. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க இது மிகவும் எளிமையான முறையாகும். அதேசமயம் இதன் பயனோ மிகப் பெரியது. எந்த உறுப்பின் பிரதிபலிப்பு எங்கு உள்ளது என்று அறிந்து கொள்ளத் தேவையில்லை.

ஒவ்வொரு நாளும் காலையில் இந்தப் பயிற்சியைச் செய்யும்போது உடல் நலம் குறைந்தவர்களுக்கு உடல் நலம் கிடைக்கிறது. உடல் நலம் உள்ளவர்களுக்கு உடல் நலம் மேலும் அதிகரிக்கிறது. நோய்கள் தடுக்கப்படுகின்றன என்கிறார் டாக்டர் ஜெயலட்சுமி.

முதன் முதலில் மரத்தைப் பார்த்த தருணம் எதுவென்று நினைவில் இல்லை. அம்மாவின் முகத்தை முதன்முதலில் பார்த்தது நினைவில் இல்லாதது போலவே! எங்கள் வீட்டு வாசலில் நின்று பார்த்தால் சற்று தூரத்தில் நான்கைந்து தென்னை மரங்கள் அசைந்து கொண்டிருக்கும். நான் அந்தத் தென்னை மரங்கள் அசைவதால் தான் காற்று வருகிறது என்று என் பால்யத்தில் நினைத்துக்கொண்டிருந்தேன். எப்போதும் பாட்டு கேட்டுக்கொண்டிருப்பது என் வழக்கம். பழைய பாடல்கள் ஒலிபரப்பில் ஒருமுறை கண்ணதாசனின் "கொடியசைந்ததும் காற்று வந்ததா? காற்று வந்ததும் கொடியசைந்ததா?" பாடலை டி.எம்.எஸ் - சுசீலா குரல்களில் கேட்கும்போது குழப்பம் வந்தது. அம்மாவிடம் சென்று "தென்னை மரம் அசைவதால் காற்று வருகிறதா அல்லது காற்றினால் தென்னை மரம் அசைகிறதா?" என்று கேட்டிருக்கிறேன். அம்மா எனக்குப் பொறுமையாக விளக்கியிருக்கிறார்.

அப்போதெல்லாம் பேருந்துப் பயணத்தின்போது பின்னோக்கி நகரும் மரங்கள் எனக்குப் பெரிய அதிசயம். அதை வேடிக்கை பார்க்க வேண்டும் என்கிற ஆவலில் ஜன்னலோர இருக்கையில் அடம்பிடித்து அமர்வேன். பேருந்து செல்லும் வேகத்தில் வேகமாக பின்னோக்கி ஓடி மறையும் மரங்களை உற்று நோக்கியவாறே செல்லும் பயணங்கள் பசுமையாக நினைவில் நிற்பதற்கு அந்த மரங்களின் பசுமையும் கூட ஒரு முக்கியமான காரணம்.




சிறுவயதில் எனக்கு ஒவ்வொரு மரமும் ஒரு அதிசயம்தான். எல்லாப் பாகங்களையும் மனிதர்களுக்குக் கொடுக்கும் வாழை மரமும், வாழையடி வாழையாக வளரும் தன்மையும் எனக்கு வியப்பாகவே இருக்கும்.

குளிர்தருவே! தருநிழலே! என்று மாணிக்கவாசகர் பாடியதில் முதல் சொல்லுக்கு முழு அர்த்தமும் மலைப் பிரதேசங்களில் காணக்கிடைக்கும். இரண்டாவது சொல்லுக்கு முழு அர்த்தமும் சமவெளியில் காணக்கிடைக்கும். என் சிறுவயதில் "வானம் எனக்கொரு போதி மரம்" என்ற வைரமுத்துவின் பாடலைக் கேட்டுவிட்டு, அதெப்படி? போதிமரத்தின் கீழ் அமர்ந்து தியானம் செய்தால் ஞானம் பெற்றுவிடலாம் என்பது சரியா என்கிற சந்தேகம் அரித்துக்கொண்டே இருந்தது. இந்த சந்தேகம்தான் என்றில்லை. அது ஏன் எப்போதும் வேதாளம் வேறு மரத்தில் ஏறாமல் முருங்கை மரத்தின் மீது மட்டும் ஏறுகிறது? என்று மரம் தொடர்பாக நிறையக் கேள்விகள் இருந்தன. எங்காவது உயர்ந்த மலைப்பகுதிக்குச் சென்றால் கீழே பரந்து விரிந்து கிடக்கும் பூமியெங்கும் பச்சைப் பசேலென்ற மரங்கள் மட்டுமே தென்படுகையில் வியப்பாக இருக்கும். இத்தனை மரங்கள் பூமியில் கால்பதித்து நடக்கும்போது தென்படவில்லையே. உயரத்திலிருந்து பார்த்தால் மட்டும் இது எப்படி சாத்தியம் என்கிற கேள்வி என்னைக் குடைந்து கொண்டே இருக்கும்.

இன்றைக்கு வெப்பமயமாதல் அதிகரித்துள்ள சூழலில், "மரம் வளர்ப்போம்" என்கிற கருத்தை அரசாங்கமே பிரசாரம் செய்கிறது. மரம் வளர்த்தலை ஊக்குவிக்கின்றனர். மரக்கன்றுகள் நடும் நிகழ்வுகள் எல்லாம் கூட நடக்கின்றன. ஆனால் இதைவிட பன்மடங்கு உக்கிரத்துடன் மரங்கள் ஒருபுறம் அழிக்கப்பட்டு காடுகள் எல்லாம் காணாமல் போய் மழையின்றி பூமி வறண்டு கிடக்கிறது.

மரம் பற்றிய என் புரிதல் சிறுவயதில் இருந்ததற்கும் இப்போதிருப்பதற்கும் நிறைய வேறுபாட்டைக் காண்கிறேன். அப்போது மரம் எனக்கு ஒரு தோழி போல. நிறைய கதை சொல்லும் பாட்டி போல. ஆனால் இன்றைக்கு மரம் என் ஆசான். மரம் என் வழிகாட்டி.

# சினிமா சினிமா



பூர்ணா

◗ ஒரு பெண் காதலிப்பதற்கு முன் பெற்றோரிடம் காட்டும் பாசம் பெரிதா? காதலனுடன் பகிர்ந்து கொள்ளும் காதல் பெரிதா? என்பதைச் சுவாரஸ்யமாக சொல்ல வரும் படம் "அர்ஜுனன் காதலி". ஜெய், பூர்ணா, தம்பி ராமையா, லஷ்மி ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் நடிக்கிறார்கள். புதுமுகம் பார்த்தி பாஸ்கர் எழுதி இயக்குகிறார். அப்பா - மகள் - காதலன் மூவருக்குமான பாசத்தை அடிப்படையாகக் கொண்டு திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது என்கிறார் இயக்குநர்.

◗ ராஜாவின் பார்வையிலே என்ற படத்தில் விஜய், அஜீத் இருவரும் இணைந்து நடித்தனர். விஜய் ஹீரோவாகவும், அஜீத் செகண்ட் ஹீரோவாகவும் நடித்த அப்படத்திற்கு பிறகு அவர்கள் இணைந்து நடிக்கவில்லை. இப்போது அவர்கள் இருவருமே அரை சதம் அடித்து விட்ட நிலையில், அவர்களை மீண்டும் இணைக்க முயற்சிகள் நடக்கிறது. விஜய் தரப்பு நல்ல கதை அமைந்தால் பார்க்கலாம் என்று சம்மதம் சொல்லி விட்டபோதும், "தல" அஜீத் மௌனம் சாதித்து வருகிறாராம்.

◗ மறைந்த நடிகர் நாகேஷ், காதலிக்க நேரமில்லை படத்தில், "ஓஹோ புரொடக்ஷன்ஸ்" என்ற பட நிறுவனத்தை துவங்கி, நகைச்சுவை செய்திருப்பார். இப்போது அதே பெயரில் ஒரு பட நிறுவனத்தைத் தொடங்கி, நாகேஷ் என்ற பெயரிலேயே ஒரு படத்தை தயாரிக்கின்றனர். நாகேஷ் கதாபாத்திரத்தில் விதார்த் நடிக்கிறார்.



சமந்தா

◗ நீதானே என் பொன் வசந்தம் படத்திற்குப் பின், சமந்தா நடித்த, சீதம்மா வாகிட்லோ சிரிமலே செட்டு என்ற தெலுங்குப் படமும், வெற்றிப் படமாக அமைந்து விட்டது. அதனால், சமந்தாவை மொய்க்கிறார்களாம் தயாரிப்பாளர்கள். அதில் சிலர், தேவையான சம்பளத்தை விருப்பம் போல் பூர்த்தி செய்து கொள்ளுமாறு பிளாங்க் செக்கை சமந்தாவிடம் நீட்டுகின்றனராம்.

◗ மீரா கதிரவன் இயக்கும் படம் "விழித்திரு". கிருஷ்ணா, விதார்த், தன்ஷிகா, வெங்கட்பிரபு, எஸ்.பி.பி.சரண், பேபி சாரா உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள். "திரைக்கதை முழுக்க முழுக்க திரில்லராக அமைக்கப்பட்டுள்ளது. படத்தின் ஒவ்வொரு காட்சியும் பரபரப்பாக இருக்கும். வித்தியாசமான மனித குணங்களைக் காட்டுவதுதான் திரைக்கதையின் நோக்கம்" என்கிறார் இயக்குநர்.

◗ ஜீவா நடித்த, ஈ, ஜெயம் ரவி நடித்த பேராண்மை படங்களை இயக்கிய ஜனநாதன், இருவரையும் இணைத்து ஒரு படம் இயக்குகிறார். படத்துக்கு, "தூக்குத் தண்டனை" என்று பெயர் சூட்டி, சினிமாவுலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார்.


◗ திருமணத்துக்கு நான்கு நாள்கள் இருக்கும் நிலையில் மணமக்கள் தங்கள் நண்பர்களுடன் சுற்றுலா போகிறார்கள். அங்கு அவர்களுக்கு ஏற்படும் விபரீதங்களை ஆக்ஷன் ப்ளஸ் திரில்லராக சொல்ல வரும் படம் "என்னாச்சு". ஸ்ரீமணி என்ற புதுமுகம் எழுதி இயக்குகிறார். நடிப்பவர்கள் அனைவரும் புதுமுகங்கள்.

◗ விஜய்சேதுபதி, இனிகோ பிரபாகர், சூரி, வ.ஐ.ச.ஜெயபாலன், ஐஸ்வர்யா, காயத்ரி ஆகியோர் நடிக்கும் படம் "ரம்மி". லிங்குசாமியின் உதவியாளர் கே.பாலகிருஷ்ணன் இப்படத்தை எழுதி, இயக்கி அறிமுகமாகிறார். "இதுவும் காதல் கதை தான். ஒரு வகையில் பார்த்தால் காதலும், ரம்மி சீட்டாட்டமும் ஒன்றுதான். சிலருக்கு முதல் சீட்டிலே வெற்றி அதிர்ஷ்டம் வந்து விடும். ரம்மியில் ஆடி ஜெயிக்க வேண்டும். காதலில் போராடி ஜெயிக்க வேண்டும். 87இலிருந்து 90ஆம் ஆண்டு கால கட்டத்தில் நடக்கும் கதையாக இது உருவாகிறது" என்கிறார் இயக்குநர்.



விஜய்சேதுபதி

# தூக்கி எறியப்படும் தூக்குக்கயிறுகள்



சாக்கடை இல்லாத கழிவுநீர்ப் பாதைகள், வீட்டுத் தோட்டம், கிணற்றடி என நீர் ஓடும் இடத்தில் எல்லாம் இன்று தூக்கி எறியப்பட்ட மின்கலங்களை (Alkaline Battery - அதாவது சாதாரண பற்றரிகள்) காண முடிகிறது. துருப்பிடித்து, துகிலுரிந்து, துர்ப்பாக்கிய நிலையில் அவை இருக்கும். அது ஒரு உயிர்க்கொல்லி என்று பலரும் அறிந்ததில்லை.

இந்த மின்கலத்திலுள்ள பொட்டாசியம் ஐதரொக்ஸைட் எளிதில் நீருடன் சேர்ந்து மின்கலனை அரித்து, உள்ளிருக்கும் பாதரசத்தை மண்ணோடு கலந்துவிடுகிறது. பாதரசம் மூளை நரம்புகளைப் பாதிக்கும் இரசாயனப்பொருளாகும். இது எளிதில் காற்றிலும் நீரிலும் கலந்து மனித உடலுக்குள் சென்று மனப்பிறழ்ச்சி, கோமா, தற்கொலையுணர்வு என பலவித பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இதற்கு காரணம் யார் என்று கைகாட்டுவது? பாதரசமற்ற கலங்களைத் தயாரிக்காத நிறுவனங்களா? தரநிர்ணயம் செய்யாத அரசா? மேற்பார்வையிடாத அமைச்சா? விழிப்புணர்வு ஏற்படுத்தாத உள்ளாட்சி அமைப்புகளா? அல்லது இது தெரியாமல் குப்பையில் போடும் நாமா?

மின்கலம் எடிசன் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன்பின் ஒரு நூற்றாண்டு ஆகியும், பரவலாகப் பயன்படுத்தப்பட்டு 30 ஆண்டுகள் ஆகியும் இன்னும் பழுதான மின்கலங்களைக் குப்பைக் கூடையிலோ அல்லது வீதிகளிலோ போட்டு வருகிறோம். இது போக கொஞ்சம் தேடிப்பார்த்தால் லித்தியம், நிக்கல், மெர்க்குரி மின்கலங்கள் என பலவிதங்களிலும் நம் மண்ணில் கிடைக்கும்.

பலவித மின்னணு உபகரணங்கள் புழக்கத்தில் வந்துவிட்டன. கைபேசியின் வசீகரம் மக்களை அடைந்த அளவிற்கு அதன் பயன்பாட்டு முறைகள் மக்களை அடையவில்லை. இன்னும் சொல்லப் போனால் எப்படி அதன் கழிவுகளைக் கையாளுவது என்று தெரியாமலேயே சந்தைக்குள் இவை வந்துவிட்டன. ஒரு கைபேசியோ, மின்கலமோ அல்லது மின்னணு உதிரிப்பாகங்களோ உபயோகமற்றுப் போகும்போது அதனை சாதாரண குப்பையுடன் போடக்கூடாது. இவைகள் குறிப்பிட்ட ஈரப்பதத்திலோ, வெப்பத்திலோ எளிதில் விஷத்தைக் கக்கும் அபாயம் கொண்டவை. பிளாஸ்டிக்காவது கரிம [Organic Elements] இரசாயனப்பொருட்களைத்தான் கொண்டிருக்கும். ஆனால் அதைவிட அபாயமான அலோக, தாண்டல் உலோக [Transition Elements] இரசாயனப்பொருட்கள் இந்த மின்னணுக் கலங்களில் உண்டு. குப்பையோடு எரிக்கப்படும்போது எளிதில் காற்றில் கலந்துவிடுகிறது. இதனால் இருதய நோய்கள், நுரையீரல் பாதிப்பு, டி.என்.ஏ. சிதைவு, புற்று நோய் என பல்நோக்கு நோய்கள் படையெடுக்கும் அபாயம் உள்ளது.

இவ்வளவு அபாயம் உள்ள பொருட்களை எப்படி அரசுகள் முறையான மறுசுழற்சித் திட்டமின்றி மக்களைப் பயன்படுத்த அனுமதிக்கிறது என்று தெரியவில்லை. ஒரு வீட்டில் ஒரு மின்சாதனப் பொருள் பயனற்றுப் போனால் முதலில் பழைய பொருள் கடையில் விற்க முயல்வர். முடியாவிடில் குப்பையில் போட்டுவிடுவர். இப்படி சேர்ந்த குப்பைக் கழிவுகளை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் ஊருக்கு ஒதுக்குப் புறமான பகுதியில் நமது உள்ளாட்சி அமைப்பு கொட்டிவிட்டு அல்லது அங்கேயே எரித்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் வண்டியேறி வந்துவிடுகிறது. எரிப்பதற்கோ, கொட்டுவதற்கோ உகந்த மக்கும் பொருட்கள் அல்ல இவை.

அதே போல பழைய பொருள் விற்கும் கடைகளுக்குப் போன பொருளெல்லாம் கடைசியில் ஒரு மறுசுழற்சியாளர் கையில் கிடைக்கிறது. அவர் அதை திறந்தவெளியில் எரித்து பணம் சம்பாதிக்கிறார். முடிவாக அந்தக் கழிவுகள் முறையாகக் கையாளப்படுவதில்லை. எரிக்கப்பட்ட கழிவுகள் காற்றில் கலக்கின்றன. குப்பையாக நிலத்தில் குவிக்கப்பட்டவை நீருடன் வினைபுரிந்து மண்ணில் நஞ்சைக் கலந்துவிடுகிறது. இதனால் மனிதன் மட்டுமன்றி பல்லுயிர்களும் பாதிக்கப்படுகின்றன.

# பெரிய மனிதர்கள்!

இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக சேர்ச்சில் இருந்த சமயம், அவர் வீட்டில் நடக்கவிருந்த ஒரு விருந்தில், அவரவர் அந்தஸ்துப்படி யாருக்குப் பக்கத்தில் யாரை உட்காரவைப்பது என்ற பிரச்சினை குறித்துப் பலர் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தார்களாம்.

தகவல் அறிந்த சேர்ச்சில், "விட்டுத் தள்ளுங்கள்.... பெரிய மனிதர்கள் தாம் உட்காரும் ஸ்தானத்தை ஒரு பொருட்டாக நினைக்க மாட்டார்கள். அதை ஒரு பொருட்டாக நினைப்பவர்கள் பெரிய மனிதர்களாக இருக்க மாட்டார்கள்..." என்று பிரச்சினைக்கு முடிவு கட்டினாராம்!



வாரம் ஒரு பாடசாலை




# யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை

**யாழ்.** மாவட்டத்தில் தனித்துவமான பாரம்பரியத்தைக் கொண்ட வடமராட்சியில் சிறந்து கொழிக்கும் பருத்தித்துறை நகரில் மகளிர் கல்வி நிலைக்காக உருவெடுத்ததுதான் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. இப்பாடசாலை தோமஸ் ஜ்குவான்ஸின் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1912 ஆம் ஆண்டில் இது ஆங்கில உயர்தரப் பாடசாலையாக மாற்றப்பட்டது. முதலாவது தேசிய அதிபராக செல்வி R.M. சின்னையா விளங்கினார். இவரின் முயற்சியால் பௌதிக வளங்கள் மேலும் உருப்பெற்றது. இவரது காலத்தில் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது. அதன் பின்னர் தனக்கென மகுடவாசகம், பாடசாலை கீதம் என்பன உருவாக்கப்பட்டது. சாரண அமைப்பின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வலுவூட்டப்பட்டன. பாடசாலைக்கென பாண்ட் வாத்தியக் குழுவும் உருவாக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செல்வி R.J. மான் அதிபராக இருந்த காலப் பகுதியில் பாடசாலை மேலும் வளர்ச்சி கண்டது. ஆங்கிலப் போட்டியில் மாணவர்கள் அதிக பரிசில்களைப் பெற்றனர். தேசிய மட்டத்திலும் பரிசில்களைப் பெற்றனர்.

1984 இல் அதிபராக கடமையாற்றிய திருமதி தேவமலர் அரியரட்ணம் அவர்கள் தமது கடமைகளை திறம்பட நிறைவேற்றினார். பல இன்னல்கள் இடர்கள் நிறைந்த காலப்பகுதியிலும் துணிச்சலுடன் செயற்பட்டு கல்லூரியின் வளர்ச்சிக்காக பாடுபட்டார். இவருடைய காலப்பகுதியில் பாடசாலை வணிகமன்றத்தினால் 'கலை நிதியம்' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது.

1987இல் திருமதி லீ. சந்திரசேகரம் அதிபராகப் பொறுப்பேற்றார். இக்காலப்பகுதியில் பாதிப்புக்குள்ளான எமது பாடசாலைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். மிகுந்த மன உறுதி யும், செயலாக்கமும் நிர்வாகத் திற மையும் கொண்ட அதிபராக விளங்கி பாடசாலையை திறம்பட வழிநடத்தினார். இவரது காலத்தில் 175 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டு மலர் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1997 இல் திருமதி செ. சுந்தரேசன் அதிபராகப் பதவியேற்றார். இவரின் வரவு பாடசாலைக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். கணனி கற்கை அறிமுகம் செய்யப்பட்டது டன், புதிதாக பல கட்டடங்களும் அமைக்கப்பட்டு பாடசாலை புத்தெழுச்சி பெற்றது. இவரின் நிர்வாகத் திறமை பல வெற்றிகளை இப்பாடசாலைக்கு ஈட்டித்தந்தது.

மாணவர்கள் இணைப்பாட விதானங்களில் மாவட்ட மாகாண, தேசிய மட்டங்களில் பரிசில்களைத் தட்டிச் சென்றனர். 2002, 2003, 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர். 2010 ஆம் ஆண்டில் 07 விளையாட்டு அணியினர் தேசிய மட்டத்தில் பங்கு கொண்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். 04பெருவிளையாட்டு அணி பங்குகொள்ள வாய்ப்பைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். செல்வி புவிதா சூரியமூர்த்தி 2008ஆம் ஆண்டில் ஆங்கில சொல்வதெழுதல் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்றமை பாராட்டத்தக்க விடயமாகும். 2009 ஆண்டு தேசிய மட்டத்திலும் தமிழ் மொழிமூலம் நடைபெற்ற சிறுகதைப்போட்டியில் செல்வி பிரியங்கா ரத்தினேஸ்வரன் முதலிடம்பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். 2010ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற சாரண ஜம்போரியில் எமது பாடசாலையைச்சேர்ந்த மாணவிகள் செல்வி



அங்கவை சந்திரகாந்தன், செல்வி கயல்விழி பதுமநிதி ஆகியோர் பங்குபற்றியமை இப்பாடசாலையின் இணைப்பாடவிதான உயர்வை வெளிக்காட்டும் குறிகாட்டியாகும்.


இவ்வருடம் நவம்பர் மாதம் பண்டாரவளையில் நடைபெற்ற அழகியல் போட்டியில் வட மாகாணத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றினர். அதிபர் திருமதி செ. சந் தரேசன் அவர்கள் 20.10.2001, 26.10.2001வரையான காலப்பகுதியில் புதுடிலியில் நடைபெற்ற கல்வி முகாமைத்துவமும் மேற்பார்வையும் சம்பந்தமான இலங்கை அதிபர்கள் கல்வி அதிகாரிகளுக்கான கருத்த ரங்கிலும் மற்றும் 28.04.2003 வரையான காலப் பகுதியில் கனடா ஒன்றோரியோவில் இடம்பெற்ற இலங்கை அதிபர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியிலும் கலந்து கொண்டார். இப்பயிற்சி நெறியானது இப்பாடசாலையை அபிவிருத்தி செய் வதற்கு உந்து சக்தியாக அமைந்தது. க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கான பாடநெறிகள் ஆங்கிலத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2010 இல் பல சதவீதம் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக் கது.




வடமராட்சி வலயத்தில் கல்வி இணைப்பாட விதான செயற்பாடுகளில் பல சாதனைகளைப்படைத்துள்ள இப்பாடசாலை, எதிர்காலத்திலும் இன்னும் பல சாதனைகளைப் புரிய வேண்டும் என வாழ்த்துகிறோம்.







# மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் இரவு பகலாக மக்களுக்கு சிகிச்சை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மை கருதி மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை கடந்த இருவாரங்களாக 24 மணித்தியாலமும் இயங்கத் தொடங்கியுள்ளது.

மருதங்கேணி பிரதேச அரசவைத்தியசாலையானது யுத்த சூழ் நிலைக்கு முன்னர் ஆண் பெண் விடுதிகளும் பிரசவ விடுதிகளும் கொண்டு இயங்கிவந்தது. இருப்பினும் கொடிய யுத்த சூழ்நிலையால் பராமரிப்பார் அற்ற நிலையிலும் சேதமடைந்து காணப்பட்டது.

பின்னர் இயல்பு நிலைக்கு வந்து வடமராட்சி கிழக்கு பகுதியில் மீள்குடியேற்றம் இடம் பெற்ற பின்னர் மீண்டும். இவ்வைத்தியசாலை ஓரளவான அடிப்படைவசதிகளுடனும் ஆளணிபற்றாக் குறைகளுடனும் இயங்கி வந்தமை குறித்து ஊடகங்கள் வாயிலாகவும் மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களிலும் பல தடவைகள் பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனாலும் தற்போது வடமராட்சி மக்களின் நலன்கருதி துரித கதியில் புனரமைப்பு செய்யப்பட்டு ஆண்பெண்களுக்கெனவும் பிரசவத்துக்கான தனித்தனியாக மூன்று விடுதிகள் கொண்டு நவீன வசதிகளுடனும் இரவு பகல் சேவையுடன் தற்போது இயங்கிவருகின்றது.

இவ்வைத்தியசாலையின் வைத்திய சேவைக்கென இரண்டு பதில் வைத்தியர்களையும் ஒரு மருத்துவ பயிலுனரையும் அடுத்தடுத்து நியமிக்கப்பட்டதையடுத்து அர்ப்பணிப்பான சேவையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வாரத்தில் ஒருமுறை பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலைக்கு செல்லும் வைத்தியர் ஒருவர் விசேட சிகிச்சையும் மேலதிகமாக சேவையாற்றி வருகின்றார். அத்துடன் அரச வைத்தியசாலைதாதியர் இன்மையால் குடும்பநலமாதுக்கள் இருவரே கடமையாற்றியும் வருகின்றனர்.

இதனை விட 10 சிற்றூழியர்களே தற்போது கடமைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


மேலும் இவ்வைத்தியசாலைக்கென அன்புலன்ஸ் வண்டியும் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் நவீன வசதிகளுடனான குளிரூட்டப்பட்ட பிரேத அறையும் பலலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்துடன் இவ்வைத்தியசாலை துரித கதியிலும் நவீன வசதிகளுடனும் படிப்படியாக அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் ஆளணிப்பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்து தரும்படியும் குறிப்பாக அரசவைத்தியசாலை தாதியர்களும் வைத்தியசாலை சிற்றூழியர்களும் போன்ற ஆளணி பற்றாக்குறையையும், மற்றும் பிரசவ விடுதிகள் இருந்தும் மகப்பேற்று நிபுணர் இல்லாத காரணத்தினால் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வரவேண்டியுள்ளது.

இதனால் மருதங்கேணி வைத்தியசாலைக்கென தனியான மகப்பேற்று நிபுணரையும் நியமித்து தரும்படியாகவும் வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் வைத்திய சேவையை விருத்தி செய்யும் நோக்கில் சுகாதாரத்திணைக்களத்தினால் முள்ளியான் பகுதியில் ஆரம்ப சுகாதார வைத்திய சாலையும் புனரமைக்கப்பட்டுவருவதாகவும் தெரியவருகின்றது. (116)

# பிள்ளை நேயப் பாடசாலைத்திட்டம் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)



பிள்ளை நேயப் பாடசாலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் யாழ்.பொது நூலகத்திலுள்ள வட மாகாண கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து கல்வி அமைச்சு இத்திட்டத்தினை முன்னெடுக்கின்றது.

ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் அனுர திஸநாயக்க இந்நிகழ்வில் விசேட உரையாற்றினார். ஆரம்ப கல்விப் பணிப்பாளர் திருமதி அசோகா பண்டிதசேகர இத்திட்டம் தொடர்பான விளக்கங்களை வழங்கினார்.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் .சி.சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

# கலாசார மண்டபத்தின் நிர்வாகம் ஆளுநருக்கு மகஜர் கையளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வடக்கின்வசந்தம் திட்டத்தின் கீழ் அத்தியடியில் பருத்தித்துறைப் பிரதேச மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசார மண்டபம் பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழே செயற்பட வேண்டும்.

ஆலய பரிபாலன சபைநிர்வாகத்தின் கீழ் செயற்படுவதற்கு கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படவேண்டும் எனக் கோரி மகஜர்ஒன்றை பருத்தித்துறைப்பிரதேச பொது அமைப்புக்கள் இணைந்து வடக்குமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

பொது அமைப்புக்களின் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

எமது பிரதேசமக்களின் நலன்கருதி கலை பண்பாட்டு வளர்ச்சிக்காக இக் கலாசார மண்டபத்தினை நிர்மாணிக்க தாங்கள் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக மகிழ்ச்சியடைவதோடு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். இக்கலாசார மண்டப நிர்வாகம் பிரதேச செயலரின் நிர்வாகத்திலோ அல்லது அரசதிணைக்களத்தின் நிர்வாகத்திலோ செயற்படவேண்டும் ஒருசிறிய குழுவின் நிர்வாகத்தில் செயற்படுவது பொருத்தமற்றது.

இக்கலாசார மண்டபத்தின்முதலாவது ஒப்பந்தத்தில் கோவில் காணி 99வருட குத்தகைக்குப் பெறப்பட்டு மண்டபநிர்வாகம் பருத்தித்துறை பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப் படுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இதுவே பொருத்தமானதாகும்.

ஆனால் இரண்டாவது ஒப்பந்தத்தில் இக் கலாசார மண்டபம் ஆலயத்தின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்படுமென எழுதப்பட்டுள்ள தாக அறியக்கிடைத்துள்ளது. இதன் உண்மைத்தன்மைகளை முழுமையாக அறியமுடியாமல் இருந்தமையால் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதன்மூலம் எமக்குத்தகவல் உண்மையெனத் தெரிய வந்தது. அத்தோடு இக்கலாசாரமண்டபம் பற்றி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலிருந்து கலாசாரப் பேரவைக்கு எந்த விதத் தகவல்களும் அறிவிக்கப்படவில்லை. என்ற நிலையும் தெரியவந்துள்ளது. அவர்கள் கடித மூலமாகவும் நேரடியாகவும் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எந்த நடவடிக்கைகளும்எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இக்கலாசார மண்டபம் பற்றித்தங்களுடன் கலந்துரையாட ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# பதிவிருக்கப் பெட்டகம்

விஸ்வரூபம் இந்திய தேசியத்திற்கு எதிராக, அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டை முன்வைக்கும் ஒரு ஹொலிவுட் சிஐஏ தயாரிப்பு போன்று எடுக்கப்பட்டுள்ள படம். இப்படி பல படங்கள் ஹொலிவுட்டிலல். எடுக்கப்படுகிறது இப்படம் பிராமணத்துவம் பெண்மையாகவும், தலிபான் [முஸ்லிம்] பயங்கரவாதம் ஆண்மையாக வீறுகொண்டு எழுவதாகவும் காட்டுவதன வழியாக, இந்தியா ஒரு பெண் அல்லது தாய் என்கிற இந்துத்துவ கருத்தியலை மீள்கட்டமைவு செய்து, இஸ்லாமிய தீவிரவாதம் என்பது வன்முறையான ஒரு ஆண்மை என்கிற ஒரு பதற்றத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. [இது காந்தியைக கொன்ற கோட்ஷேவின் உளவியல்.] இது இஸ்லாமிய தாலிபான் அல்லது தீவிரவாத எதிர்ப்பு படம் என்பதைவிட இந்தியா அமெரிக்க மேலாண்மையை ஏற்பதன் வழியாக, தன்னை ஒரு உல்கமயப்போரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதை சொல்வதையே நோக்கமாகக் கொண்டு உள்ளது. அதாவது புஸ்ஸின் பின்னால் நின்று நல்ல முஸ்லிமாக மாறுங்கள என்பதே. அமெரிக்க மேலாண்மை என்கிற கலாச்சார ஏகாதிபத்தியத்தை கட்டமைக்க, இஸ்லாமிய கலாச்சாரத்தை கலாச்சார தீவிரவாதமாக சித்தரிக்க முனைகிறது.

**– ஜமாலன்**

கமல்ஹாசன் தன்னை எப்போதும் கலைஞன் என்றோ, சுயாதீனமாகப் படைப்பை உருவாக்குகிறேன் என்றோ, கலைஞனுக்கு உரிய உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறவரோ அல்ல. அவர் நடிகராக நடித்த படங்கள் முழுமையும் பொழுதுபோக்கு வகைப்பட்டவை. நடிகர் என்ற எல்லையைத் தாண்டி பட உருவாக்கத்தில் அவரும் பங்கேற்றுச் செய்த பேசும்படம், தேவர் மகன், மகாநதி, ஹேராம், குருதிப் புனல், உன்னைப் போல் ஒருவன், தசாவதாரம் போனறன சமகாலத் தமிழ்ச் சமுகத்தில் பொதுப்புத்தி நிலையிலும், அறிவார்ந்த தளங்களிலும் விவாதிக்கப்பட்ட கருத்துக்களை விவாதப் பொருளாக்கிய படங்கள். மைய நீரோட்டக் கருத்தோடு ஒத்துப் போகும் நிலைப்பாட்டை முன்வைப்பவர்.

இப்போது அவரது நோக்கம் உலகச் சந்தையில் நுழைவது. அதற்கேற்ற களமாகவும் கருத்தாகவும் நினைத்தது தான் விஸ்வரூபம். படத்தை ஆப்கனிஸ்தான் பின்னணியில் இசுலாமியத் தீவிரவாத உள்ளடக்கத்தோடு எடுத்துள்ளார். முழுமையாக உலகச் சந்தைக்குள் நுழைவதற்கான முயற்சியில் திட்டமிட்டுத் தேர்வு செய்து தொடங்கிய வியாபாரத் திட்டம்.

**– அ.ராமசாமி**

தடை விதிக்க சொல்வது, தணிக்கை செய்ய சொல்வது, தண்டிக்கச் சொல்வது போன்றவையெல்லாம் விமர்சன செயல்பாடாக கருதப்படக்கூடாது. உதாரணமாக அஷிஸ் நந்தி என்ற மிக முக்கியமான சமுகவியல் அறிஞர் தவறான பொருளபடும்படி ஒரு கருத்தை கூறிவிட அவரை கைது செய்ய வேண்டும் என அரசியல் தலைவர்கள் சிலர் கோரினார்கள். இது குறித்து பேசும்போது நண்பர்கள் "அவரை கைது செய்ய வேண்டியதில்லை. ஆனால் அவர் கருத்துக்கள் விமர்சனத்திற்குரியவை" என்று சொல்கிறார்கள். இந்த "ஆனால்" என்ற வார்த்தையை நான் கடுமையாக எதிர்த்து வருகிறேன். "அந்த படைப்பை தடை செய்யக்கூடாது; ஆனால் அது நல்ல படைப்பல்ல". என்று நாம் சொல்லக் கூடாது; சிந்திக்கவும் கூடாது. "கைது செய்யப்படக்கூடாது", "தடை செய்யக்கூடாது" என்று மட்டும் சொன்னால் ஒருவேளை நாம் அந்த சிந்தனையாளரையோ, படத்தையோ ஆதரித்ததாக ஆகிவிடுமோ என்று நினைக்கிறார்கள். விமர்சனத்தையும் தண்டனையையும் பிரித்தறிய வேண்டும். நம்முடைய வாதத்தின் கட்டமைப்பை மாற்றி சொல்லிப் பார்க்க வேண்டும். "ஆஷிஸ் நந்தியின் சிந்தனைகள் விமர்சனத்திற்குரியவை. அதற்காக அவரை கைது செய்வது அந்த விமர்சனங்களை வலிமையற்றதாக்கி விடும்" என்று சொல்வது முதிர்ச்சியாக இருக்கும். "ஒரு படைப்பு பல பிழையான அர்த்தங்களைத் தருவதாக இருக்கிறது. அதை தடைசெய்வது அதை விமர்சனரீதியாக எதிர்கொள்ள உதவாது" என்று சொல்லிப் பழகவேண்டும். ஜனநாயக, சுதந்திரவாத மனப்போக்கை விட, பாசிச மனப்போக்கே நம்மை எளிதில் கைக்கொள்கிறது என்பதை நாம் எச்சரிக்கையுடன் புரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் இந்த தடை, தணிக்கை, தண்டனை விழைவுகள் குறைந்து உடனுறைதல் (being-with), உரையாடல் விழைவுகள் அதிகமாகும்.

**– ராஜன் குறை**

# உடைப்பெடுத்த குளங்களை அதிகாரிகள் பார்வை

(வவுனியா)

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் உடைப்பெடுத்த குளங்களை விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டதுடன் தொடர்ந்து மேற்கொள்ள வேணடிய செயற்பாடுகள் தொடர்பிலும் விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

வவுனியா - ஓமந்தை கமநல கேந்திர நிலையத்திற்கு உட்பட்ட நாவற்குளம், பெரியமடு ஆகியன இவ்வாறு உடைப்பெடுததுள்ளதாக தெரிவித்த கமநல சேவைகள் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் தணிகாசலம், இவற்றினை தற்போது சீரமைப்பது தொடர்பில் விவசாயிகளுடன் கலந்துரையாடியதாகவும் கடந்த மூறை ஏற்பட்ட வெள்ளத்தின்போது உடைப்பெடுத்த குளங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது மேலும் குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை உடைப்பெடுத்த குளங்களை பார்வையிட்ட ஓமந்தை கமநல கேந்திர நிலையத்தின் தலைவர் க.அமிர்தலிங்கம் பெரியமடு குளம் உடைப்பெடுத்தமையினால் 110 ஏக்கர் நெற்பயிரும் நாவற்களம் உடைப்பெடுத்தமையினால் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட வயலும் பாதிப்படைந்துள்ளதுடன், ஏனைய விவசாய நிலங்கள் மழையினால் முழுமையாக அழிவடைந்துள்ளமையினால் அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு 25000 ரூபா வீதம் நஷடஈடு அரசாங்கத்தினால் வழங்கப்படவேண்டும் என தெரிவித்தார்.

# காட்டு யானைகள் அட்டகாசம் வாழைத்தோட்டம் துவம்சம்

வவுனியா - அலைகல்லுப் போட்டகுளம் மீள்குடியேற்ற கிராமத்தில், புதன்கிழமை இரவு அருகில் உள்ள காட்டிலிருந்து வந்த யானைகள் வாழைத்தோட்டங்களை முற்றாக அழிந்துள்ளதுடன், ஏனைய பயிர்களையும் துவம்சம் செய்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்த சமயம் இக் கிரர்மத்தினுள் புகுந்த யானைக் கூட்டம் அங்கு பயிரிடப்பட்டிருந்த மேட்டுப்பயிர்களையும் வாழைப்பயிர்களையும் முற்றாக சேதப்படுத்தியுள்ளன. இந் நிலையில் அங்கிருந்த குடிசைகளில் இருந்த குடும்பத்தினர் மழையின் இரைச்சலால் வெளியில் நடப்பதை அறியாது தூங்கியுள்ளனர்.

எனினும் சிறிது நேரத்தில் மழையின் சத்தம் குறையவே வெளியில் ஏதோ சத்தம் கேட்பதை உணர்ந்து வெளியே வநது பார்த்தபோது யானைகள் வாழை மரங்களை சேதப்படுத்திக் கொண்டிருக்கவே அவர்கள் ஓசை எழுப்பியதுடன் அயலவர்களையும் அழைத்து யானையினை கலைத்துள்ளனர்.

இதேவேளை அக் கிராமத்தினை சூழவும் காடாக காணப்படுவதனால் தாம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலத்தில் இருந்தே இவ்வாறு யானைகளின் அச் சுறுத்தலுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்தனர். (160)

# கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்று மூன்றுமாடிக் கட்டடம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 860 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் இன்று மாணவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

அவுஸ்ரேலிய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மூன்று மாடிகளைகொண்ட கட்டடம் ஒன்றும் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும் உள்ளடங்கலாக பிரார்த்தனை மண்டபம், ஆய்வு கூடங்கள், மலசல கூடங்கள் என நவீன முறையில் 860 இலட்சம் ரூபாவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது

இந்நிகழ்வில் அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர், நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார், வட மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர், யுனிசெப் நிறுவனத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்ட அதிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (29)

# வவுனியாவில் சர்வோதயத்தின் மலேரியா விழிப்புணர்வு நிகழ்ச்சி

வவுனியாவில் சர்வோதய நிறுவனத்தின் ஊடாக மலேரியா விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மலேரியா தடுப்புக்கான வழிவகைகள் அடங்கிய கற்றல் உபகரணங்கள் வவுனியா சர்வோதய மண்டபத்தில் வைத்து வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட பாடசாலை அதிபர்களிடமும் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட சர்வோதய இணைப்பாளர் உதயகுமாரன் தலைமையில் இடம் பெறற இந்நிகழ்வில், சர்வோதய குடும்பநல உத்தியோகத்தர் ஆனந்த், இத்திட்டத்திற்கு பொறுபபான சர்வோதய சக ஊழியர்கள் உட்பட வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா உட்பட பாடசாலை அதிபர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது மலேரியா விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், மலேரியா விழிப்புணர்வை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



சிவில் பாதுகாப்பு படையில் இணைந்த முன்னாள் போராளிகளின் கலாசார நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சிவில் பாதுகாப்பு படை பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றும் வேலணைப் பிரதேச சபை



**க.செல்வம்**
**வேலணை**

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்), அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் ஆகிய டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்புக்கமைய ஜனாதிபதி யுடன் இணைநது தேர்தல் காலத்தில் தாம் கொடுத்தவாக் குறுதிகளை வேலணை பகுதி யில் நிறைவேற்றிக் கொணடிருக்கின்றனர்.

தேர்தலில் வெற்றி பெற்று தவிசாளர் பதவியைப் பெற்றபின், புங்குடுதீவில் சனசமூக நிலயங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினின் நிதிப் பூங்க்ளீப்பின் மூலம் சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கு நிதிகள் ஒதுக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன

அத்தோடு, நெல்சிப் திட்டத்தினூடாக சங்கத்தார்கேணி வீதி திருத்தம் செய்யப்பட்டு தற்பொழுது மக்களின் பாவனைக்காக விடப்பட்டும் உள்ளது. முற்றவெளிப் பகுதியில் பொதுச் சந்தை ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு வழஙகப்பட்டுள்ளது.

அதுவும் நிறைவுறுத்தப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்படும். அதேபோன்று இந்து மயானங்கள், மடங்கள் திருத்தம் செய்யப்பட்டக் கொண்டிருக்கின்றன. அத்தோடு, வேலணை பிரதேச சபையின் உப அலுவலகம் புங்குடுதீவு அலுவலக உத்தியோகத்தர்கள் மூலம் கிராமத்தை சுத்தமாக்கும் அல்லது தூய்மையாக்கும் செயற்பாடுகளைச் செய்து வருகின்றது.

நயினாதீவுக்குச் செல்கின்ற யாத்திரிகள் தங்குவதற்கு இளைப்பாறும் மடம் ஒன்றையும் கட்டியிருக்கின்றார். அவற்றினூடாக யாத்திரிகள் பயன் பெறுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இருளில் மூழ்கியிருந்த புங்குடுதீவுப் பிரதேசத்தினைப் பல்வேறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கைவிடுத்து அதனையும் பெற்றுக் கொடுத்து மின்சக்தி எரிசக்தி அமைச்சரையும் புங்குடுதீவுப்பிரதேசத்திற்கு கொண்டு வந்த பெருமை வேலணைப் பிரதேச சபை தலைவரையே சாரும்.

இவர் எந்நிறுவனமாக இருந்தாலும் சரி மக்களுக்குரிய அபிவிருத்திகளையே முன் வைப்பவராக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ஆளுநர் மற்றும் ஜனாதிபதியிடம் அநேகமான அபிவிருத் தித் திட்ட முன் மொழிவுகளைச் சமர்ப்பித்திருக்கின்றார். அவற்றில் புங்குடுதீவுப் பிரதேசத்திற் கும் பல்வேறு அபிவிருத்திட்ட முன் மொழிவுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தீவகத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றால், அது வேலணை பிரதேசசபை தவிசாளரின் சிபார்சின் மூலமே என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு வேலைத் திட்டங்கள் நடைபெறும் போது நேரடியாகச் சென்று பார்வையிட்டு செயற்படுத்துபவராகவும் கானப்படுகின்றார்.

இவற்றுடன் வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து நிர்வாக கட்டமைப்புக்களும் இவரின் கண்காணிப்பில் நடைபெற்று கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் வேலைத்திட்டம் மக்களின் ஒத்துழைப்போடு செய்ய வேண்டும் என்பதற்காக மக்களுக்குத் தேவையான மக்கள் விரும்பத்தக்க அபிவிருத்திகளை மேற்கொள்ளவேண்டும் என்பதில் கரிசனை காட்டப்படுகின்றது.

அத்தோடு ஒவ்வொரு புதன் கிழமையும் மக்களைச் சந்திக்கும் நாளாக பிரகடனப்படுத்தி மக்களைச் சந்திப்பு இடம்பெறுகிறது. அவர்களின் பிரச்சினைகள, கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளும் எடுதது வருகின்றமையும் குறிப்பிடத தக்கது

இவற்றுடன் புஙகுடுதீவுப் பகுதியில் இருக்கின்ற தகுதியான வேலைவாய்ப்புக் கோரி நிற்கின்ற இளைஞர் யுவதிகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்களின் முழுமூச்சுள்ள முயற்சியின் பயனாக அவரின் உதவி யுடன் வேலைவாய்ப்பை கட்டம் கட்டமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட புங்குடுதீவுப் பிரதேசத்தில் செய்யப்படுகின்ற வேலைத்திட்டங்களாகக் காணப்படுகின்றது.

41. பின்வருவனவற்றில் வேர் மூலம் இனப்பெருக்கம் செய்வது
    1. வாழை    2. தேக்கு    3. பூவரசு

42. பூக்கள் மூலம் எண்ணெய் பெறப் பயன்படும் தாவரம்
    1. சூரியகாந்தி    2. செவ்வந்தி    3. மல்லிகை

43. மனிதனுக்கு உதவும் செயற்பாடுடைய பறவை
    1. குயில்    2. கொக்கு    3. காகம்

44. மூலிகையாகப் பயன்படும் தாவரம் எனக் கருதப்படுவது?
    1. குப்பைமேனி    2. கீரை    3. மல்லிகை

**பின்வருவனவற்றிக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

45. பதிவுத் தபால் ஒன்றுக்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி என்ன?
    1. ரூபா 40.00    2. ரூபா 15.00    3. ரூபா 20.00

46. வெளவாலின் இடப்பெயர்ச்சிக்கு உதவும் ஓர் அங்கம்
    1. கண்    2. கால்    3. காது

47. வித்துக்களிலிருந்து இனம் பெருகாத ஒரு தாவரம்
    1. மா    2. பப்பாசி    3. மரவள்ளி

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)**

48. இலங்கையில் மிக நீளமான ஆறு.......................................கங்கை ஆகும்.

49. நீர்மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலுநிலையம்.......................ஆகும்.

50. மிக உயரமான நீர்வீழ்ச்சி.......................................நீர்வீழ்ச்சி ஆகும்.


51. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப்பெறாதது.......................ஆகும்.


52. மகாவலி கங்கை உற்பத்தியாவது.......................மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.

**இலக்கம் 53 தொடக்கம் 56 வரையான வினாக்களுக்குரிய படங்களின் பெயர்களை எழுதுக.**

53.  (.................................)

55.  (.................................)

54.  (.................................)

56.  (.................................)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

நேரம் 45 நிமிடம்

# கல்வி முரசு

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழ்வரும் குறியீடுகளை அவதானித்து விடை எழுதுக.**



01. நான் பந்து விளையாடுவேன் என்பதைக் குறியீட்டில் காட்டுக.

.................................................................................

02. நான் நாயுடன் கடைக்குச் சென்றேன் என்பதைக் குறியீட்டில் காட்டுக.

.................................................................................

03. 

04. எதிரிகள் துரத்தும்போது வாலை அறுத்துவிட்டுத் தப்பி ஓடும் பிராணி எது?
    1. ஓணான்    2. எலி    3. பல்லி    4. அணில்

05. முட்டை, இறைச்சி என்பவற்றைத் தரும் பிராணி எது?
    1. கோழி    2. ஆடு    3. கிளி    4. புறா


06. உணவு உண்பதற்குப் பயன்படுத்தும் உபகரணம் எது?
    1. கரண்டி    2. துடைதுண்டு    3. நீர்க்குவளை    4. குளிர்பானம்

07. பச்சையாக உண்ணக்கூடிய இலை வகை எது?
    1. கீரை    2. அகத்தி    3. வல்லாரை    4. கரட்

**முதலாம் பகுதியிலுள்ள சொற்கூட்டத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 09. உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவுக்கூறு | நுளம்பு |
| 10. கண்ணுக்குத் தெரியாத கிருமி | வாந்திபேதி |
| 11. நீரால் பரவக்கூடிய நோய் | குளோரின் |
| 12. நோய்களைப் பரப்பும் உயிரினம் | நுண்ணங்கி |
| 13. நீரைச் சுத்தமாக்கும் பொருள் | காபோவைதரேற்று |

14. ஒவ்வொரு உருவிலும் முழு உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.



1. $\frac{1}{4}, \frac{1}{3}, \frac{1}{4}$    2. $\frac{1}{8}, \frac{1}{8}, \frac{1}{4}$    3. $\frac{1}{4}, \frac{1}{8}, \frac{1}{4}$


15. ஒரு பெரிய காணியில் பூந்தோட்டத்திற்கு மேற்கே தென்னந்தோப்பும் தென்னந்தோப்பிற்கு தெற்கே மாந்தோட்டமும் உள்ளன. ஆகவே பூந்தோட்டத்திற்கு எத்திசையில் மாந்தோட்டம் உள்ளது.
1. தெற்கு 2. தென்மேற்கு 3. கிழக்கு

16. ராஜா, நிமல் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 45 கிலோகிராம் ஆகும். நிமல், சுரேஸ், ராஜா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 68 கிலோகிராம் ஆகும் எனின் சுரேஸின் நிறை யாது?
1. 15 கிலோகிராம் 2. 68 கிலோகிராம் 3. 23 கிலோகிராம்

17. முகவையொன்றினுள் நீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை மூன்றையும் கலக்கி விடப்பட்டபோது மூன்றும் வெவ்வேறாகப் பிரிந்து தனித்தனி படையாகக் காணப்பட்டது. இதில் B படையாக இருப்பது?

18.

1. நீர் 2. தேங்காயெண்ணெய் 3. மண்ணெண்ணெய்

19.

200 மீற்றர் சுற்று வட்டத்தைக் கொண்ட நீள்வட்ட மைதானம் இதுவாகும். இதில் ஒரு கிலோமீற்றர் தூரத்தை ஓடி முடிக்க வேண்டுமாயின் எத்தனை தடவைகள் இந்த மைதானத்தைச் சுற்றி ஓட வேண்டும்.
1. 5 2. 2 3. 3

**கீழே அட்டவணையில் 0 தொடக்கம் 9 வரையான ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டுள்ள 14 தொடக்கம் 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | A | P | M | S | F | H | B | D | E |


20. AP + RB + VK = ..............................
1. ABK 2. APE 3. EPA

21. SVP - PDK = ..............................
1. PAB 2. MVE 3. ABP

22. MRB X V = ..............................
1. ADMV 2. VDAV 3. ADVM

23. ஒருவருக்கு தீ விபத்து ஏற்படும்போது அவ்விபத்துக்குள்ளானவர் உடனடியாகச் செய்ய வேண்டியது.
1. நீர் இருக்கும் இடத்தைத் தேடி ஓட வேண்டும்
2. நிலத்தில் படுத்து உருள வேண்டும்
3. வேகமாக ஓட வேண்டும்

24. குமாரின் வயது 15, கமல் குமாரிலும் பார்க்க 7 வயது மூத்தவன். ராஜா கமலிலும் பார்க்க 5 வயது இளையவன் எனின் ராஜாவின் வயது என்ன?
1. 22 2. 27 3. 39

25.

அருகே தரப்பட்ட முகவையானது 7 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?
1. 7 L 800 ml 2. 6 L 200 ml 3. 5 L 200 ml



**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**
(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)


26. இலங்கையில் மிக நீளமான ஆறு.............................. கங்கை ஆகும்.

27. நீர்மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலு நிலையம்.............................. ஆகும்.


28. மிக உயரமான நீர்வீழ்ச்சி .............................. நீர்வீழ்ச்சியாகும்.

29. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப் பெறாதது.............................. ஆகும்.

30. மகாவலி கங்கை உற்பத்தியாவது.............................. மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.

31.


சிறுவன் ஒருவன் மைதானமொன்றில் நடந்து சென்ற பாதையை அருகே உள்ள படம் காட்டுகின்றது. சிறுவன் ஆரம்பித்த இடம் A எழுத்தாலும் நடந்து முடிந்த இடம் B எழுத்தாலும் காட்டப்பட்டுள்ளன.
சிறுவன் எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பினான்.
1. 6 2. 7 3. 8


32.

புள்ளிக்கோட்டினால் வரையப்பட்ட பெரிய சதுரமுகியினைப் பூரணப்படுத்த உருவில் காண்பிக்கப்பட்டது போன்று சிறிய சதுரமுகிகள் இன்னும் எத்தனை தேவை?
1. 64 2. 54 3. 44 4. 42

33. விதை பழத்திற்கு வெளியே அமைந்துள்ள தாவரம்?
1. தென்னை 2. மரமுந்திரிகை 3. அன்னாசி

34. பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து தாலியில் உண்டு வாலியில் இல்லை.
இரண்டாம் எழுத்து காம்பில் இல்லை கம்பில் உண்டு.
மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு குடமியில் இல்லை. (..............................)

35. கீழ் வரும் வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைக்கும் பொழுது பந்தியொன்றினைப் பெறமுடியும். அச்சரியான விடையைத் தெரிவு செய்க.
A அங்கே ஓர் ஆமையைப் பிடித்து
B ஒரு நாள் ஒரு ஓநாய் பசியால் எங்கும் அலைந்தது.
C அவ்வாமையைத் தன் கூரிய பற்களால் கடித்தது.
D கடைசியாக ஒரு குளக்கரைக்கு வந்தது.
1. C, B, A, D 2. B, D, A, C 3. B, A, D, C

36. A பயணச் சீட்டுப் பெறுதல்
B பொதிகளை இருக்கையில் மேல் பொதிவைக்கும் இடத்தில் வைத்தல்
C புகையிரத நிலையம் செல்லல்.
D ஆசனத்தில் அமர்தல்
1. C, A, D, B 2. C, A, B, D 3. A, C, B, D

37. பின்வரும் அறிவுத்தல்களுக்கு ஏற்ப சரியான வரிப்படத்தை தெரிவு செய்க.
-வடக்கு நோக்கிச் செல்க
-பின்பு கிழக்கு நோக்கிச் செல்க
-பின்பு வடக்கு நோக்கிச் செல்க
-பின்பு மேற்கு நோக்கிச் செல்க


**பின்வரும் கணக்குகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**


38. 4260 = 4000 + .................... + 60 + 0

39. 1367 = .................... + 300 + 60 + 7

40. 9823 = 9000 + 800 + ........ + 3

# பாகிஸ்தானின் செயல்களை பொறுத்துக்கொள்ளமுடியாது

## - பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு



(டில்லி)

இந்திய எல்லையில் பாகிஸ்தான் வாலாட்டினால் தக்க பதில்டி கொடுக்கப்படும் என பிரதமர்மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.


டில்லியில் நடைபெற்ற கவர்னர்களுக்கான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்போது பாகிஸ்தான் குறித்து பிரதமர் பேசியதாவது,

பனி மூட்டம் நிறைந்த இந்திய எல்லையில், சமீபத்தில் பாகிஸ்தான் அத்துமீறி நுழைந்து வீரர்கள் இருவரின் தலையை வெட்டிச்சென்றது. இனிமேலும் பாகிஸ்தானின் அது போன்ற செயல்களை பொறுத்துக்கொள்ள முடியாது. அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்.

ஜம்மு காஷ்மீர், வடகிழக்கு பகுதி மற்றும் மாவோயிஸ்ட் பகுதிகளில் நாட்டின் பாதுகாப்பு சூழல் மேம்பட்டுள்ளது. இந்தியாவின் பக்கத்து நாடுகளுடன் அமைதியாக செல்வதையே இந்தியா விரும்புகிறது. ஆனால் மிரட்டல்கள் விடுக்கப்படும் பட்சத்தில், கடுமையான தக்க பதிலடி கொடுக்கப் படும்.

மேலும் நாட்டில் பெண்கள் மற்றும் பலவீனமானவர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைக்கு தக்க நடவடிக்கை எடுக்க பொலிஸ் படைகள் சிறப்பு கவனம் மேற்கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் கவர்னர்கள் மாநில அரசுகளுக்கு வழிகாட்ட வேண்டும் என அவர் கூறினார்.




## கிறிஸ்தவ நற்சிந்தனை

### புதிய சிந்தனை உருவாகவேண்டும்

பழையன களைந்து புதியன புகுதல் வேண்டும். "புதிய மதுவைப் புதிய தோற்பைகளில் தான் ஊற்றி வைப்பர்" (மத் 9:17) என சொல்லியிருக்கிறார். எங்களுடைய வாழ்வின் பாவச் செயற்பாடுகள் அனைத்தையும் களைந்து தபசு காலமாகிய இந்நாட்களில் நாம் மனம் மாறி புதிய மனிதர்களாக மாற வேண்டும்.


எங்களுடைய புதிய மனப்போக்கை, புதிய தரிசனத்தை, புதிய அமைப்பை உருவாக்காவிட்டால் எந்தப் பிரயோசனமும் இருக்காது. பழைய அமைப்புக்களுக்குள் புதிய சிந்தனையும் கெட்டும், தொலைந்தும் போகும்.

தற்போது புதிய மதுவை பழைய தோற்பைகளில் ஊற்றிக்கொண்டிருக்கும் "இறையியல் சிந்தனை அறிஞர்கள், முற்போக்கு வாதிகள்" இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இயேசுவின் பார்வையில் இது பிரயோசனமற்றது. புதிய மதுவை புதிய தோற்பைகளில் வார்த்து வைர்கும் திருச்சபை உருவாகும் வரை அதாவது இயேசுவின் இறையாட்சி விழுமியங்களை பிரதிபலிக்கும் அமைப்புக்கள் தோன்றும்வரை எல்லா மதுவுமே சிந்திப்போகின்ற வீணாய்ப் போகின்ற மதுதான்.

எனவே மனிதத்தை மதிக்கக் கற்றுக்கொள்வோம், மனிதர்களை மனிதர்களாக மதித்து இறையாட்சி மலர முயற்சிப்போம்...

வி.பி.தனேந்திரா



ஜெய்தாபூர் அணுஉலை தொடர்பாக குழுவினருடன் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தும் மார்க்சிஸ்ட் கம்யூ.கட்சியின் பிரகாஷ்காரத், இந்திய கம்யூனிஸ் கட்சியின் டி.ராஜா.

# சிவசேனா கட்சியுடன் கூட்டணி இல்லை

(மும்பை)

சிவசேனா கட்சியுடன் கூட்டு இல்லை என மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா - எம்.என்.எஸ். தலைவர் ராஜ் தாக்கரே கூறியுள்ளார்.

மும்பை மாநகரின் முன்னணி அரசியல் கட்சியான சிவசேனாவை, பால் தாக்கரே தொடக்கினார். அவர் மகன் உத்தவ் தாக்கரே, கட்சியின் செயல் தலைவராக உள்ளார். உத்தவுக்கும், பால் தாக்கரேயின் சகோதரர் மகன் ராஜ் தாக்கரேவுக்கும் மோதல் ஏற்பட்டதால், சிவசேனாவிலிருந்து பிரிந்து சென்ற ராஜ் தாக்கரே, மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா என்ற கட்சியை தொடக்கி, நடத்தி வருகிறார். பால் தாக்கரே கடந்த ஆண்டு, நவம்பரில் இறந்தார். அவர் மறைவிற்கு பிறகு, சிவசேனாவும், மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனாவும், இணைந்து செயல் படும் என எதிர்பார்க்கப்பட்டது.


இந்நிலையில், கோல்காபூரில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த எம்.என்.எஸ். கட்சி கூட்டத்தில், ராஜ் தாக்கரே பேசியதாவது,

எந்த காரணத்தை கொண்டும், சிவசேனாவுடன் கூட்டு சேரும் எண்ணம் எனக்கு இல்லை. அது, சட்டசபை தேர்தலாக இருந்தாலும் சரி, லோக்சபா தேர்தலாக இருந்தாலும் சரி. மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா, சிவசேனாவுடன் இணைந்து செயல்படாது. ஒரு



கை ஓசை குறித்து பத்திரிகைகளில் பேசினால் சரிப்பட்டு வராது. உண்மையான எண்ணம் இருந்தால், என்னிடம் தான் பேசியிருக்க வேண்டும். சிவசேனாவுடன் நான் கூட்டு சேர போவதில்லை. மேலும் நம் மாநிலத்து பெண்கள் மீது கை வைக்கும், வெளிமாநில நபர்களின் கைகளை துண்டாக்குங்கள் என தன் கட்சியினருக்கு ராஜ் கட்டளையிட்டார்.

# கர்நாடகா மீது அவமதிப்பு வழக்கு



(சென்னை)

காவிரியில் குறைவாக தண்ணீர் திறப்பு விடமாக உச்ச நீதி மன்றத்தின் உத்தரவை கர்நாடக அரசு அவமதித்து விட்டதாக தமிழக அரசு உச்ச நீதிமன்றம் வழக்கு தொடர்ந்துள்ளது.

காவிரி டெல்டா பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிர்களை காப்பாற்ற மத்திய நிபுணர் குழுவினர் பரிந்துரையின் பேரில் கர்நாடகம் உடனடியாக 2.44 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கடந்த 7 ஆம் திகதி உத்தரவிட்டது.

இந்த நிலையில் உச்சநீதிமன்றத்தின் உத்தரவை கர்நாடக அரசு அவமதித்து விட்டதாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளது. இதுதொடர்பாக தாக்கல் செய்யப் பட்டுள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

காவிரி டெல்டா விவசாயிகளின் அவசர தேவைக்காக கர்நாடக அரசு உடனடியாக 2.44 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு வழங்கவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. ஆனால், கர்நாடக அரசு இந்த உத்தரவை மதிக்கவில்லை.

கிருஷ்ணாராஜசாகர் அணையில் இருந்து வினாடிக்கு 2000 கனஅடி திறக்கப்பட்டதாக கர்நாடக முதல்அமைச்சர் ஷெட்டர் கூறியிருந்தார். ஆனால் 127 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. இதே அளவில் தண்ணீர் வந்தால் 2.44 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூர் அணை வந்துசேர 240 நாட்கள் ஆகும். இது கோர்ட்டு உத்தரவை அவமதிக்கும் செயலாகும்.

எனவே, நீதிமன்ற உத்தரவுபடி தண்ணீரை வழங்க மறுக்கும் கர்நாடக அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். முழுமையான அளவு தண்ணீரை உடனடியாக திறந்துவிட உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "சில்மிஷம் செய்தால் பளார்" ராணி முகர்ஜி அறிவுரை



(மும்பை)

பெண்களை, சில்மிஷம் செய்யும் ஆண்களின் கன்னத்தில், 'பளார்' என அறைந்து, பொதுமக்களின் கவனத்தை திருப்ப வேண்டும் என,' பாலிவுட் நடிகை, ராணி முகர்ஜி, பெண்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

மும்பை, வில்லே பார்லே மேற்கு பகுதி, மகளிர் கல்லூரியில், மகளிர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை, மும்பை பொலிஸார் நடத்தினர். அதில், நடிகை ராணி முகர்ஜி பேசியதாவது,

பொது இடங்களில், பெண்களை, சில்மிஷம் செய்யும் ஆண்களை, சிறிதும் யோசிக்காமல், கன்னத்தில், 'பளார்' என அறையுங்கள். அதன் மூலம் அருகில் உள்ள பிறரின் கவனம், உங்கள் மீது திரும்பும். அதிரடியாக, அடி கொடுப்பதன் மூலம், கயவர்களை வெட்கி தலை குனிய செய்யுங்கள். எனக்கு இது போன்ற இக்கட்டான சந்தர்ப்பங்கள் பல வந்த போது, இப்படி தான் செய்தேன். அதிகளவு பாலியல் பலாத்கார சம்பவங்கள், வீடுகளில் தான் நடக்கிறது.

இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள், உறவினர்கள் அல்லது குடும்ப நண்பர்களாக தான் இருக்கின்றனர். இவற்றை, பெண்கள் துணிச்சலாக எதிர்க்க வேண்டும். இவ்வாறு நடிகை, ராணி முகர்ஜி கூறினார்.

# நித்தியானந்தாவுக்கு நாக சாதுக்கள் பட்டம்



(அலகாபாத்)

நித்தியானந்தாவிற்கு, நாகா சாதுக்கள் மகாமண்டலேஸ்வர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலம் அலகாபாத்தில், மகாகும்பமேளா நடைபெற்று வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சாதுக்கள் உள்ளிட்ட பல கோடி மக்கள், இந்த திருவிழாவில் பங்கேற்றுள்ளனர். இத்திருவிழாவில், நித்தியானந்தாவும் கலந்துகொண்டுள்ளார். அங்கு நாகா சாதுக்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நித்தியானந்தாவிற்கு, மகாமண்டலேஸ்வர் பட்டம் வழங்கப்பட்டது.

# பாகிஸ்தான் நாட்டின் எதிரிகள் பிரித்தானியாவிற்கும் எதிரிகளே

## டேவிட் கமரூன்



உங்கள் நண்பர்கள் எமக்கும் நண்பர்கள், உங்கள் எதிரிகள் எமக்கும் எதிரிகளே என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன், பாகிஸ்தான் பிரதமரான ராஜா பர்வேஷ் அஷ்ரப்பிடம் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை இங்கிலாந்துக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஷ் அஷ்ரப் பிரித்தானிய பிரதமரை சந்தித்து பேசினார். லண்டனில் உள்ள 10 டவுனிங் வீதியில் அமைந்திருக்கும் பிரதமர் இல்லத்தில் இருவருக்கும் இடையே இச்சந்திப்பு நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள், மற்றும் இராஜ தந்திர உறவுகள் என பல விடயங்கள் இருவருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டன. இதன் போது ஆப்கானிஸ்தான் தொடர்பில் கருத்துரைத்த பாகிஸ்தான் பிரதமர் அஷ்ராப், ஆப்கானின் உயர் சமாதானக் குழுவுடன் இணைந்து அங்கு ஸ்திரத்தன்மை ஏற்பட பாகிஸ்தான் விரும்புகின்றது.

ஆப்கானில் குடியிருந்த நேட்டோ உட்பட சர்வதேச படைகள் அங்கிருந்து மெல்ல மெல்ல விடைபெறும் நிலையில் அங்கு அமைதியைக் காப்பதற்கு ஆப்கான் இராணுவம் இன்னமும் தங்களை வலிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

சமீபத்தில் ஆப்கான் ஜனாதிபதி கர்சாயியும் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியும் இலண்டனில் சந்தித்து தலிபான்களை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்ததை கமரூன் வரவேற்றார்.

மேலும் இவ்வருடம் கோடை காலத்தில், இது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தான் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளதையும் கமரூன் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# மருந்தை மாற்றிய டாக்டருக்கு இரண்டரை ஆண்டுகள் சிறை



பிரித்தானியாவில் முறையான சிகிச்சையளிக்காமல் நோயாளியின் இறப்புக்கு காரணமாக இருந்த இந்திய டாக்டருக்கு, இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த டொக்டர் பாலா கொவ்வாலி(வயது 64) என்பவர் பிரித்தானியாவில் உள்ள ப்ரைம் கேர் என்ற அமைப்பின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் அங்கு சென்று சிகிச்சையளிப்பது வழக்கம்.

இந்நிலையில் கடந்த 2009ம் ஆண்டில் ஆண்ட்ரே பெல்லோஸ்(வயது 42) என்பவருக்கு சிகிச்சை அளிப்பதில் அலட்சியமாக நடந்துகொண்டதால் ஆண்ட்ரே பெல்லோஸ் இறந்ததாக டாக்டர் பாலா கொவ்வாலி மீது குற்றம் சாட்டப்பட்டது.

சர்க்கரை நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த ஆண்ட்ரே, வெறும் தலைவலியால் பாதிக்கப்பட்டிருப்பதாக கருதிய டொக்டர் பாலா கொவ்வாலி அவருக்கு இன்சுலின் மருந்து உள்ளிட்டவற்றை அளிக்காமல் அலட்சியமாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் பாலா கொவ்வாலிக்கு, இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

# கைதிகளின் உயிரணுக்களை கடத்தி கருத்தரிக்கும் பலஸ்தீன பெண்கள்



இஸ்ரேல் நாட்டின் சிறைகளில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் பாலஸ்தீன கைதிகளின் உயிரணுவை கடத்தி வந்து செயற்கை முறை மூலம் கருத்தரித்து பிரசவிக்கும் பாலஸ்தீன பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது.

இஸ்ரேலின் அண்டை நாடான பாலஸ்தீனத்தை சேர்ந்த சிலர், இஸ்ரேலுக்குள் நுழைந்து தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர். இச்சம்பவங்களில் பிடிபடும் பாலஸ்தீனியர்களில் பலர் தேசத் துரோக குற்றத்தின் கீழ் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இஸ்ரேல் சிறைகளில் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளனார். சராசரியாக இஸ்ரேல் குடிமக்களுக்கு சிறைகளில் வழங்கப்படும் எவ்வித சலுகையும் பாலஸ்தீனிய கைதிகளுக்கு வழங்கப்படுவது கிடையாது. இஸ்ரேலிய கைதிகள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை சிறை வளாகத்தினுள் உள்ள குடியிருப்புகளில் தங்களது உறவினர்களை சந்தித்து பேசவும் சட்டபூர்வமாக திருமணம் செய்து கொண்ட கைதிகள், தங்களின் மனைவியுடன் தனிமையில் இருக்கவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

ஆனால், பாலஸ்தீன கைதிகளில் எவருக்கும் இவ்வகை அனுமதி அளிக்கப்படுவதில்லை. இதனால், சிறைவாசம் அனுபவிக்கும் பாலஸ்தீன கைதிகள் தங்களின் அடுத்த தலைமுறைக்கான வாரிசுகளை உருவாக்க வாய்ப்பளிக்கப்படாமல் சிறைக்குள்ளேயே வாழ்நாளை கழித்து பிணமாக தான் விடுதலை ஆகின்றனர். கடந்த 1997ஆம் ஆண்டு இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேமில் உள்ள சந்தைப் பகுதியில் வெடிகுண்டு வைத்த வழக்கில் மூளையாக செயல்பட்ட அல் சிபன் என்ற பாலஸ்தீனியர் கைது செய்யப்பட்டார். விசாரணைக்கு பின்னர் அவருக்கு 27 ஆயுள் தண்டனைகளும் தனியாக 25 ஆண்டு கடுங்காவல் தண்டனை[illegible] விதிக்கப்பட்டது.

அல் சிபன் கைது செய்யப்பட்ட போது அவரது மனைவி தலால் அல் சிபனுக்கு 18 வயது. கடந்த 16 ஆண்டுகளாக கணவரை பிரிந்து கற்பொழுக்கத்தை பேணிக் காத்து வாழ்ந்து வந்த அவர், கணவர் விடுதலையாகி விடுவார் என்ற நம்பிக்கையில் சென்ற ஆண்டு வரை காத்திருந்தார்.

ஆனால், 27 ஆயுள் தண்டனைகளை அனுபவித்துவிட்டு விடுதலையாகும் அவரால் வாரிசை உருவாக்க முடியாது என்பதை உணர்ந்ததால் ஒரு புதிய முடிவை மேற்கொண்டார். கணவர் செய்த தவறுக்காக அவரது மனைவி உறவுகள் இன்றி ஏன் தவிக்க வேண்டும் என்று யோசித்த அவர் சிறையில் இருக்கும் தனது கணவரின் உயிரணுவைக் கடத்திவர ஏற்பாடு செய்தார். அந்த உயிரணுவின் மூலம் செயற்கை முறையில் கருத்தரித்த அவர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இதே வழியை இஸ்ரேல் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் சில பாலஸ்தீனிய கைதிகளின் மனைவிகளும் கடைபிடிக்கின்றனர். பாலஸ்தீனத்தில் உள்ள ஒரு டாக்டர் இந்த செயற்கை கருத்தரிப்பு முறையை இலவசமாகவே செய்து வருவதாக கூறப்படுகிறது. சிறையில் இருந்து கடத்தி வரும் உயிரணுக்களின் மூலம் கருத்தரித்ததாக கூறும் பெண்கள் அவை எதன் மூலம், எப்படி? யாரால்? கடத்தி வரப்பட்டது என்ற ரகசியத்தை வெளியிட மறுத்து விட்டனர்.

# பிரான்ஸ் மக்களவையில் ஓரினச் சேர்க்கைக்கு அங்கீகாரம்







பிரான்ஸ் மக்களவையில் ஒரே பாலினத் தொடர்புக்கு தேவையான சட்ட அங்கிகாரம் கிடைத்துள்ளது.

பிரான்சில் ஆணோடு ஆணும், பெண்ணோடு பெண்ணும் இணைந்து வாழும் வாழ்க்கைக்கு குடும்பம் என்கின்ற சட்ட அங்கீகாரம் வழங்கவும், அவர்கள் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கவும் பிரான்ஸ் மக்களவையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் சட்ட அங்கிகாரத்துக்குத் தேவையான ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னர் மக்களவையில் பத்து நாட்கள் வரை இரு தரப்பிலும் கடுமையான விவாதங்கள் நடைபெற்ற சில நாட்கள் நள்ளிரவு வரை கூட இந்த விவாதங்கள் தொடர்ந்துள்ளன.

இந்த வாக்கெடுப்பு முடிந்ததும் இதனை எதிர்த்துவந்த இம்மானுவேல் டுகாம்ப (Emmanuel Ducamp) ஊடகத்தினருக்கு அளித்த பேட்டியில், மக்களவையில் நடந்த வாக்கெடுப்பை நாங்கள் மதிக்கிறோம். அதற்காக நாங்கள் ஆதரிப்பதாகக் கருதிவிடக்கூடாது. இன்னும் சட்டமாகவில்லை மேலவை ஒப்புதல் கிடைத்தும், அரசியலுரிமைக் குழுவின் ஒப்புதல் பெற்றும் சட்டமாகும்போது பார்க்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இனி வரும் மார்ச் மாதம் 18ம் திகதி மேலவையில் இந்த மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொழுது அங்கும் ஆதரவு கிடைத்தால் சட்டமாக அங்கீகரிக்கப்படும்.

இந்த சட்ட அங்கீகாரம் கிடைத்தால் உலகளவில் பிரான்சில் ஒரு பால் உறவை அங்கிகரித்த பன்னிரண்டாவது நாடாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி கலாசாரத்திற்கு கட்டுப்பாடு அமெரிக்காவில் ஒபாமா மீண்டும் உறுதி



அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரம் கட்டுப்படுத்தப்படும் என அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக 2ஆவது முறை பதவியேற்றபின் ஒபாமா நாடாளுமன்ற கூட்டு கூட்டத்தில் முதற்தடவையாக பேசும்போது அமெரிக்காவில் கடந்த ஆண்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களை நினைவு கூர்ந்தார். குறிப்பாக நியூ டவுன் துப்பாக்கிச் சூட்டில் பள்ளிக் குழந்தைகள் பலியானதை சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவில் இதுபோன்று நடப்பது முதல்த் தடவை அல்ல என்றாலும் தற்போது நடைபெறுவது வித்தியாசமானது. எனவே, துப்பாக்கி வன்முறையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றார். மேலும் பொருளாதாரத்தை கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்துறையில் 60 இலட்சத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

உலகிலேயே செல்வவளம் மிக்க நாடான அமெரிக்காவில் யாரும் வறுமையில் வாடக் கூடாது. எனவே குறைந்தபட்சமாக சம்பளம் மணிக்கு 9 டொலராக அதிகரிக்கப்படும். ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள 66 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்களில் 34 ஆயிரம் பேர் அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள் வாபஸ் பெறப்படுவார்கள்.

பின்னர் படிப்படியாக படைகள் வாபஸ் பெறப்பட்டு அங்கு தீவிரவாதிகளுடனான போர் ஆண்டு இறுதியில் முற்றிலும் நிறுத்தப்படும். அமெரிக்க வளர்ச்சிக்கு வரி மற்றும் கல்வியில் மாற்றம் கொண்டு வரப்படும். அணுகுண்டு சோதனை நடத்திய வடகொரியா மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொடக்கத்திலேயே குழந்தைகளுக்கு தரமான கல்வி கற்றுக் கொடுக்கப்படும். அதன் மூலம் குற்றங்கள் குறையும். அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் கல்வித் தேவைகள் பூர்த்தி; வடக்கின் கல்விநிலை உயரும்



(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நாம் படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம். எமது பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை கருத்தில்கொண்டு அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு வழங்கி வருகின்றது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி கற்ற பிரஜைகளை கொண்ட பிரதேசமாக எமது பகுதி மாற்றமடைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். மாணவர்களை சரியான முறையில் நெறிப்படுத்துவதன் ஊடாக அவர்களை சிறந்த கல்விமான்களாக உருவாக்கமுடியும். அத்துடன் பெற்றோர் தினந்தோறும் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி, பின்னடைவு போன்றவற்றை ஆராய்ந்து அவர்களுக்குத் தேவையான ஊக்கத்தினை அளிக்கவேண்டும். மேலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் நாம் வழங்கத் தயாராக உள்ளோம். அத்துடன் இப்பாடசாலை அதிபரால் கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தொகுதி குறைவேலை பூர்த்தி, விளையாட்டு மைதானத்திற்கான காணி, போட்டோகொப்பி இயந்திரம் போன்ற தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் க.விஜயதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.முருகதாஸ்காந்தன், அயற்பாடசாலை அதிபர்கள், ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் க.சின்னராசா, வலிகிழக்கு. பிரதேசசபை உறுப்பினர் கிருஸ்ணபிள்ளை செல்வராஜா (லிங்கேஸ்) பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கூட்டமைப்பை...

கட்சிகளுக்கும் தனிச்சின்னம் இருந்தது. எனினும் பொதுச் சின்னத்திற்காக தமிழரசுக் கட்சியின் சின்னத்தை தூசுதட்டி பயன்படுத்தி வருகின்றனர். இதன் பின்னர் மக்களும் ஏனையோரும் கேட்டதற்கிணங்க நானும் சித்தார்த்தனும் இணைந்துள்ளோம். தற்போது நாம் இணைந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ, சித்தார்த்தன் கூட்டமைப்பை பதியவேண்டும் எனக் கேட்கின்றனர். நாமும் அவ்வாறே கேட்கின்றோம். ஏனெனில் அவர்கள் எம்மை மட்டம் தட்டி தம்மை வளர்த்துக் கொண்டிருப்பதால். ஆனால் அனைவரும் சம்மதம் தெரிவித்தும் தமிழரசுக்கட்சி மாத்திரம் உடன்படாதுள்ளது. அதற்கு சம்பந்தரும் சேனாதிராஜாவுமே இடையூறாகவும் உள்ளனர்.

அவ்வாறு பதியாது எவ்வாறு எம்மையும் பயன்படுத்தி பணம் சேகரிக்க முடியும். இல்லையேல் எம்மை வெளியில் விடவேண்டும். அவ்வாறெனில் நாம் பதிவு தொடர்பில் கேட்கமாட்டோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட எமது கட்சியினர் பலர் தேர்தலில் வென்றுள்ளனர். எனவே பதிவதில் என்ன பிரச்சினையுள்ளது என்பது தெரியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கேட்டவர்களை தமிழரசுக்கட்சியில் இணைத்துள்ளனர். எனவே உண்மையும் விசுவாசமும் இல்லாமயே இதற்கு காரணமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வதில் எவ்வித கஷ்டமும் இல்லை. அதன்மூலம் மக்களுக்கு பலம்கூடும், பல ஸ்தானம் கிடைக்கும். என்னையும் சித்தார்த்தனையும் சேவகர் மாதிரி தேனீர் காவுவதற்கே வைத்துள்ளனர்.

திருகோணமலையில் எனது கட்சியில் வெற்றி பெற்றவரை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் இணைத்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துபோனால் தம்மை பலப்படுத்துவதற்கான செயற்பாட்டை சிலர் இப்போதே மேற்கொள்கின்றனர். ஏன் ஒரே கட்சியாக செயற்பட பயப்படுகின்றனர். தந்தை செல்வா தொடங்கிய கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி. அதில் வந்து அனைவரும் சேருங்கள். நான் எனது கட்சியை விட்டுத்தருகின்றேன். அதில் வந்து அனைவரும் சேருங்கள். அதுதானே தந்தை செல்வாவின் விருப்பமும்கூட எனத் தெரிவித்தார்.

## தொடரும்...

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளவர்கள் 4 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பண்டிக்கெய்த கிராம அலுவலர் பிரிவிலுள்ள பெரியமடு அம்மன் வித்தியாலயத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேரும், புளியங்குளம் வடக்கிலுள்ள பழைய அரைக்கும் ஆலையொன்றில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், பழையவாடி கிராம அபிவிருத்தி அமைப்பிலுள்ள நலன்புரி நிலையத்தில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், பிரப்பைமடுக் கிராமத்திலுள்ள பொதுமண்டபமொன்றில் 831 குடும்பங்களைச் சேர்ந்த 1,220 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அனர்த்த முகாமைத்துவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு அந்தந்தக் கிராம அலுவலர் பிரிவுகளினூடாக சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்நிலையத் தகவல்கள் கூறின. பெரியமடுக்குளம், பண்டிக்கெய்தகுளம், நாவற்குளம் ஆகியன உடைப்பெடுத்துள்ளன. புதுக்குளம், கிழவிக்குளம், வவுனியாக்குளம் ஆகியன வான்பாய்கின்றன. ஏற்கனவே உடைப்பெடுத்த கதிரவேலர் பூவரசங்குளம், மேற்குளம், துலாவிக்குளம் ஆகியவற்றிலிருந்து நீர் மேவிப்பாய்கின்றது.

இது இவ்வாறிருக்க குஞ்சுக்குளம், மூன்றுமுறிப்பு பாதை வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், அப்பாதையூடான வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. அத்துடன், வவுனியாவிலிருந்து குஞ்சுக்குளம், நவ்விக்குளம் கிராமத்திற்கான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா அனர்த்த முகாமைத்துவ பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோன்று கிளிநொச்சியில் நேற்று அதிகாலை 5.00 மணியளவிலிருந்து பெய்த அடைமழை யைத் தொடர்ந்து 43 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ தகவல்கள் தெரிவித்தன. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 94 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் முருகானாந்தா அ.த.க.பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் மருதநகர் கிராம அலுவலர் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் பன்னங்கண்டி அ.த.க.பாடசாலையிலும் முஹமட் முன்பள்ளியிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கச்சார் கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் தினேஷ் முன்பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நேற்று வெள்ளத்தினால் இவ்வருடத்திற்குள் இரண்டாவது தடவையாகவும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முரசுமோட்டை ஆரம்ப வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அம்மக்களுக்கு உலருணவுப் பொருட்களையும் வழங்கிவைத்தார். அத்தோடு நீரில் மூழ்கியுள்ள கண்டாவளை பிரதேச செயலகத்தினையும் நேரில்சென்று பார்வையிட்டார். (160,கே,29)

# தமிழகத்தில் இலங்கையர் தற்கொலை

தமிழ்நாடு - விருப்பாட்சி இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த அகதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். விருப்பாட்சி இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த 38 வயதுடைய சிவஞானசீலன் என்பரே தூக்கிட்டுக் கொண்டவராவார். இவர் திருமணமாகி அகதி முகாமில் தனது மனைவி கவிதாவுடன் வசித்து வருகிறார்.

சிவஞானசீலன் தொடர்ச்சியாக வீட்டுக்கு குடித்துவிட்டு வந்து கவிதாவுடன் கலகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். இதனை கவிதா கண்டித்துள்ளார்.

# பொதுநலவாய மாநாடு ஆயத்தங்கள்; அரசைப்பாராட்டும் கமலேஷ்சர்மா

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை முன்நின்று நடத்துவதற்கான இலங்கையின் ஆயத்தங்கள் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தமது விஜயத்தை நிறைவுசெய்த பின்னர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர் ஆகியோருடனான கலந்துரையாடல்களின்போது பொதுநலவாய நாடுகளின் வளங்கள், அனுபவங்கள் மற்றும் வாய்ப்புக்கள் என்பவற்றை பரிமாறிக்கொள்ளுதல், இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற விடயங்களை ஆராய்வதற்கான சந்தர்ப்பம் தமக்கு கிடைத்ததாக சர்மா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் மே மாதமளவில் லண்டனில் நடைபெறவுள்ள நல்லிணக்கத்திற்கான பொதுநலவாய புத்திஜீவிகள் மாநாட்டில் இலங்கையும் பங்குபற்றவுள்ளதாக கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் பிரதம நீதியரசர் பதவிநீக்கம் செய்யப்பட்டமை குறித்தும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கமலேஷ் சர்மா, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் லெட்டிமர் ஹவுஸ் கொள்கைகளின் சட்டவாதிக்கம் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் இலங்கை அதிகாரிகளுக்கு வலியுறுத்த விரும்புவதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வீதி விபத்தில்...

மணிக்குச் சற்றுப்பின்னர் மேற்படி வீதியால் இவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த சமயம் வேகமாக வந்த லொறி ஒன்று இவரை மோதித்தள்ளியது. இதனால் அந்த இடத்திலேயே அவர் மரணமடைந்தார்.

சித்தன்கேணியைச் சேர்ந்த துரைராஜசிங்கம் துரேந்திரன் (வயது 24) எனபவரே இந்த விபத்தில் மரணமடைந்துள்ளார். இவர் கிளிநொச்சி ஹற்றன் நஷனல வங்கியில் கடமையாற்றுபவராவார். இவரின் சடலம் அச்சுவேலிப் பொலிஸாரால் அச்சுவேலி மருத்துவமனையில் நேற்று இரவு ஒப்படைக்கப்பட்டிருந்தது. (27,44)

## கூட்டத்தில்...

பிரத்தியேக அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்பட்டி ருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் 'உதயன்' விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பங்கேற்பதில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தமுடிவு தனக்கு உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை என்றும் மாவை சேனாதிராஜா எம்.பிக்கான அழைப்பிதழை பயன்படுத்தியே தான் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

## குற்றச்சாட்டுக்களுக்கு...

அமைச்சர் கூறினார். இதேவேளை, அரசாங்கத்தால் நாட்டின் காணி வெளிநாட்டவருக்கு விற்கவோ குத்தகைக்கு விடப்படவோ இல்லை எனவும் ஏதேனும் வரிக்கு உட்பட்டு குறிப்பிட்ட சில காலத்திற்கு மாத்திரம் முதலீட்டுக்காக காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

## மேன்முறையீட்டு...

மனுவை அண்மையில் விசாரித்திருந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், நாட்டின் தலைமை நீதிபதியை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் இல்லை எனத் தீர்ப்பளித்திருந்தது.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு நாட்டின் அரசியல் யாப்பிற்கு முரணானது என்று தற்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின்...

முற்றுமுழுதாக சிறப்பாக செயற்பட்டுள்ளது என்று கூறமுடியாது. அதன் செயற்பாடுகளில் முழுமையாகத் திருப்தியடைய முடியாது.

எனினும் இதனைக் காரணம் காட்டி, இலங்கை அரசாங்கத்தை புறக்கணிக்க முனைவது, இந்த விடயங்களில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் இந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் அவுஸ்ரேலியா கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன் பொதுநலவாய அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளுக்கும், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அவுஸ்ரேலியா அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நல்லிணக்க முனைப்பு சர்வதேசமயம் ஏற்க முடியாது என்கிறது அரசாங்கம்



(கொழும்பு)

யுத்தத்திற்குப் பின்னர் பாரியளவிலான நல்லிணக்க முனைப்புக்களை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த நல்லிணக்க முனைப்புக்களைச் சர்வதேசமயப்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் முழுமையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த போதியளவு கால அவகாசம் வழங்கப்படவேண்டியது அவசியமானது குறுகிய காலத்தில் பாரியளவிலான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என ஆயுத முரண்பாடுகளில் சிவிலியன் பாதுகாப்பு என்ற தொனிப் பொருளில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சிலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டபோது ஐ.நா. விற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலிதகோஹன்ன தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு அரசாங்கம் முழு அளவில் முயற்சிமேற்கொண்டுவருகிறது. யுத்தம் இடம்பெற்ற காலத்திலும், அதன் பின்னரும் பெண்கள் மற்றும் சிறு வர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2009 ஆம் ஆண்டு மே வரையில் வட மாகாணத்தில் 119 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 5 சம்பவங்கள் தொடர்பில் ஏழு பாதுகாப்பு உததியோகத்தர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே முதல 2012 ஆம் ஆண்டு மே வரையில் 256 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் தொடர்பில் 367 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதில் 6 சம்பவங்கள் தொடர்பில் பத்து பாது காப்பு உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்படி, யுத்தம் இடம் பெற்ற காலத்தில் மொத்த குற்றச் செயல்களில் 3.3 வீதமும் அதன் பின்னர் 5.6 வீதமும் படையினருக்கு எதிராக பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்புப் படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இராணுவ சட்டத்திற்கு அமையவும் நாட்டின் சிவில் சட்டங்களுக்கு அமையவும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிறிய நாடு என்பதனால் சில சம்பவங்கள் தொடரபில் ஊடகங்களில் பாரியளவில் பிரசாரம் செய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்கள் வங்கித் தலைவராக காமினி செனரத் நியமனம்



மக்கள் வங்கியின் தலைவராக ஜனாதிபதி அலுவலக பிரதான செயற்பாட்டாளர் காமினி செனரத் நியமிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுத் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கித் தலைவர் டபிள்யு.கருணாஜீவ கடந்த மாதம் காலமானதை அடுத்து அப்பதவிக்கு புதிதாக எவரும் நியமிக்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவு பாடசாலைகளுக்கு ஜனாதிபதி நிதி ஒதுக்கீடு

நயினாதீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

நயினாதீவுக்கு ஜனாதிபதி விஜயம் செய்த சமயம் அப்பகுதி பாடசாலைகளின் அதிபர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இந்த நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

நயினாதீவு மகா வித்தியாலயத்துக்கு இரண்டு இலட்சம் ரூபாவும், நயினை கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்துக்கு இரண்டு இலட்சம் ரூபாவும், நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக இப் பாடசாலைகளின் அதிபர்களான சோ.குகநேசன், வீ.ஓங்கார லிங்கம், திருமதி எஸ்.இராசரட்ணம் ஆகியோர் வடக்கு ஆளுநருடன் நேற்று விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர். மேற்படி நிதியுதவியைப் பயன்படுத்தி கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (...)

# இலங்கை கடற்பரப்பை பயன்படுத்திய ஈரான்

தமது கடற்படையினர் இலங்கைக் கடற்பரப்பை பயன்படுத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது. ஈரான் கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பை பயன்படுத்திக் கொள்வதாக அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே ஈரானும் சர்வதேச கடற்பரப்பை பயன்படுத்திக்கொள்ள உரிமை உள்ளதாக ஈரானிய கடற்படைத் தளபதி ஹபிபுல்லாஹ் சய்யாரி தெரிவித்துள்ளார். சர்வதேச கடற்பரப்புக்களை ஈரான் பயன்படுத்திக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சூடான், ஜெத்தா, இலங்கை மற்றும் லடாக்கியா போன்ற நாடுகளின் கடற்பரப்புக்களை ஈரான் கடற்படையினர் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எதிரிகளைத் தோற்கடிக்கவும், தேசத்தைப் பாதுகாக்கவும் எந்த இடத்தையும் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். உலகின் பல பகுதிகளிலும் யுத்தக் கப்பல்களை நிலை நிறுத்தப் போவதாக கடந்த மாதம் ஈரான் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டக் கல்லூரி பிரச்சினை விரைவில் சாதகமான தீர்வு

## அமைச்சர் ஹக்கீம் உறுதியளிப்பு

(கொழும்பு)

சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சை பாடத்திட்டம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு சட்டக் கல்வி மன்றத்துடன் கலந்துரையாடி சாதகமான தீர்வொன்றை விரைவில் பெற்றுத் தருவதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நல்லாட்சிக்கான சட்டத்தரணிகள் அமைப்பினர், சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் சகிதம் நீதியமைச்சில் நடாத்திய சந்திப்பின் போதே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா, ஜனாதிபதியின் ஆலோசகர் சுமித் விஜேசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும், சட்டத்தரணிகள் சிலரும் இச் சந்திப்பில் பங்கு பற்றினர்.

பிரஸ்தாப அமைப்பினர் கையளித்த மகஜரை பெற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வுக்கான பாடத்திட்டத்தில் மாற்றம் செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளீர்கள்.

இது தொடர்பில் பிரதம நீதியரசருடனும் சட்டக் கல்வி மன்றத்துடனும் கலந்துரையாடி சாதகமான முடிவொன்றை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இன்றைய கூட்டத்தில் சட்டக் கல்லூரி அனுமதி விவகாரத்தின் தற்போதைய நிலைமை குறித்து தெரிவிக்கப்பட்ட உணர்வு பூர்வமாகவும், ஆக்ரோஷ மாகவும் அபிப்பிராயங்களின் ஊடாக இந்தப் பிரச்சினையின் ஆழம் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

சட்டக் கல்லூரி பரீட்சை சம்பந்தமாக சில பிரச்சினைகள் ஏற்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரிய ஆலோசனைகளை வழங்கினார். அத்தகைய சந்தர்ப்பத்தில் சட்டக் கல்லூரி மன்றத்தின் சுயாதீன தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஜனாதிபதி நடந்து கொண்டார்.

இச்சந்திப்பில், நல்லாட்சிக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி நீத் உதேஷ், அதன் செயலாளர் சட்டத்தரணி ஹேமந்த நாகொட விதாரண மற்றும் சட்டமாணவர்களும், பெற்றோர்களும் கருத்துக்களை தெரிவித்தனர்.

# சிறுவர் உரிமைகள் பற்றிய மாபெரும் விவாதப் போட்டி

## பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல் தொடர்பாக மாணவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக விவாதப் போட்டிகளை நடத்துவதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்கு கொள்ள முடியும். போட்டிகளில் பங்கேற்கும் போது வயதை உறுதிப்படுத்தும் ஆணவமொன்றைப் போட்டியாளர்கள் தம்வசம் வைத்திருத்தல் கட்டாயமானது.

விண்ணப்பங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல்' வேண்டும்.

போட்டிகள் யாவும் தமிழ் மொழி மூலம் நடைபெறும். விவாதப் போட்டிகள் இம்மாதம் பெப்ரவரி 21ஆம், 22ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு வளாகம் (யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக, யாழ்.நகர்) யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

தலைப்புக்கள் யாவும் முற்று முழுதாகச் சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு தொடாபானதாகவே அமைந்திருக்கும். அத்துடன், விசேடவிதமாக இப் போட்டிகளின் போது எத்தகைய விடயங்களைக் குறித்து விவாதிக்க வேண்டுமென்பதைத் தெரிவிப்பதற்குப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு போட்டியின் ஆரம்பத்தில் பங்குபற்றும் பிள்ளைகளிடம் இருந்தும் கருத்துக்கள் பெறப்படவிருக்கின்றன.

எனவே காத்திரமான, மிகவும் அவசியமான எத்தகைய விடயங்களை விவாதிப்பது பயனுள்ளது என்பது குறித்துத் தங்களின் பிள்ளைகளும் அந்த நேரத்தில் கருத்துக்களை முன்வைக்கலாம். பெறுமதியான கருத்துக்கள் விவாதத் தலைப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படும்

போட்டிகளின்போது அணியொன்று தெரிவிக்கும் கருத்துக்களின் சுருக்க வடிவத்தினை எழுத்து வடிவத்தில் அந்தந்த அணியினரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1500க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்கள் &
University of Wollongong Australiaவில்
பட்டக்கல்வியுடன்
Business &
Marketing Communications
(வணிகத் தொடர்பாடல் கற்கைகள்)
&
Dan தமிழ் ஒளி & FM 91.4 இல்
நேரடிப் பயிற்சி, தொழில்வாய்ப்புடன்
Mass Communications &
Media Studies (ஊடகக் கற்கைகள்)
with
English for Communication
Information Technology
சுயவிபரக்கோவை, தொலைபேசி இலக்கத்துடன், தொடரவிரும்பும் கற்கைநெறியை கடித உறையில் குறிப்பிட்டு, பெப்ரவரி 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
SMS பதிவுகளுக்கு, 'Media' அல்லது 'Business' என்று Type செய்து
077 36 16 798க்கு அனுப்பவும்
சிகரம் SIKARAM
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com இணையம்: www.sikaram.lk

அச்சு இயந்திர இயக்குநர்கள் தேவை

S.O.R.D., K.O.R.D இயந்திரங்கள் இயக்கக்கூடிய முன் அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர் எதிர் வரும் 17ஆம் திகதி காலை பத்து மணிக்கு தினமுரசு அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆளணி முகாமையாளர்
'தினமுரசு'
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.